# தினபூமி

thinaboomi.com

பூமி: 21 சுற்று: 294 புரட்டாசி 31 | RNI Regn. No. 61494/94

வேலூர், வெள்ளி, அக்டோபர் 17, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00




**மூன்று நாட்கள் பயணமாக பிரேசில் துணை ஜனாதிபதி இந்தியா வருகை: ஜனாதிபதி முர்முவை சந்திக்கிறார்**

...2-ம் பக்கம்

**ஆந்திராவில் ரூ.13,430 கோடியில் புதிய திட்டங்களை துவக்கி வைத்தார் பிரதமர் மோடி**

...3-ம் பக்கம்

**ஐ.சி.சி.-யின் செப்டம்பர் மாதத்திற்கான விருதை வென்ற அபிஷேக், மந்தனா**

....6-ம் பக்கம்





முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழக சட்ட முன்வடிவு குறித்து பேசினார்.

### தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலை., திருத்த மசோதா:

# கவர்னரின் பரிந்துரையை ஒருபோதும் ஏற்க முடியாது

## சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டம்

சென்னை, அக். 17-

**தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைக்கழக சட்டமுன்வடிவு சட்டப்பேரவையால் நிறைவேற்றப்படும் முன்பு, அதுகுறித்து கருத்து தெரிவிக்கும் அதிகாரம் கவர்னருக்கு வழங்கப்படவில்லை. இதில் கவர்னர் அரசமைப்பு சட்டத்துக்கு முரணாக கருத்துக்களை தெரிவித்துள்ளார் என தமிழக முதல்வர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் விமர்சித்துள்ளார். மேலும், சித்த மருத்துவ பல்கலைக்கழக திருத்த மசோதாவில், கவர்னரின் பரிந்துரையை ஏற்க முடியாது என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.**

**கவர்னரின் பரிந்துரை...**

இதுகுறித்து அவர் பேசுகையில், "தமிழ்நாடு சித்த மருத்துவ பல்கலைக்கழக சட்டமுன்வடிவானது, நிதி சட்ட முன்வடிவு என்ற வகைப்பாட்டில் வருவதால் இதனை பேரவையில் ஆய்வு செய்ய கவர்னரின் பரிந்துரை பெறப்பட வேண்டும். பொதுமக்களின் கருத்தை அறிந்து, வரப்பெற்ற கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு, மக்களாட்சியை ஒரு தூணாக கருதப்படும் நிர்வாகத்தால் இந்த சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டு, சட்டத்துறையால் சரி பார்க்கப்பட்டு, பல கட்டங்களாக பரிசீலிக்கப்பட்டு இந்த சட்டமுன்வடிவு கவர்னருக்கு அனுப்பப்பட்டது.

> **சட்டம் இயற்றும் அதிகாரம் முழுக்க முழுக்க மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சட்டப்பேரவைக்கே சொந்தம். தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு தொடர்பாக கவர்னர் அனுப்பியுள்ள செய்தியில் இருக்கும் கருத்துகள் மற்றும் பேரவையின் மாண்பைக் குறைக்கக்கூடிய வார்த்தை அடங்கிய பகுதிகளைத் தமிழ்நாடு சட்டப்பேரவை நிராகரித்தது.**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**விதிமுறைகளுக்கு முரண்...**

ஆனால், கவர்னர் அரசமைப்பு சட்டத்தின்படி பின்பற்றப்பட்டு வந்த வழக்கமான நடைமுறையை பின்பற்றாமல், இச்சட்ட முன்வடிவில் உள்ள பிரிவுகள் குறித்து தனது கருத்தை தெரிவித்து, அந்த கருத்துக்களை சட்டப்பேரவை உறுப்பினர்களின் கவனத்துக்கு பொருத்தமான முறையில் கொண்டுவர வேண்டுமென தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இது அரசமைப்பு சட்டத்துக்கும், பேரவை விதிமுறைகளுக்கும் முரணானது.

**கவர்னருக்கு இல்லை...**

ஒரு சட்டமுன்வடிவு பேரவையில் விவாதிக்கப்படுகையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு மட்டுமே, அதில் திருத்தங்களை முன்மொழியவோ, விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் திருத்தங்களை திரும்பப் பெறவோ, இல்லையெனில் வாக்கெடுப்பு கோரவோ அதிகாரம் உள்ளது. சட்டமுன்வடிவு பேரவையால் நிறைவேற்றப்படும் முன்பு, அதுகுறித்து கருத்து தெரிவிக்கும் அதிகாரம் கவர்னருக்கு வழங்கப்படவில்லை. எனவே, கவர்னர் செய்தியில் இடம்பெற்றுள்ள கருத்துக்களை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ள இயலாது. கவர்னரின் செய்தியில் ஆய்வு செய்யும் தொனியில் பொருத்தமான அல்லது தகுந்த எனும் வார்த்தைகளை சேர்ந்துள்ளது பேரவையின் மாண்பை குறைக்கக் கூடியது என்பதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

**பேரவையின் மாண்பை**

கவர்னர் அரசமைப்பு சட்டத்துக்கு முரணாக கருத்துக்களை தெரிவித்துள்ளார். சித்த மருத்துவ பல்கலைக்கழக சட்டமுன்வடிவை பேரவையில் ஆய்வு செய்ய கவர்னர் அனுப்பியுள்ள செய்தியில் இருக்கக்கூடிய அவரின் கருத்துக்கள் மற்றும் பேரவையின் மாண்பை குறைக்கக்கூடிய வார்த்தைகள் அடங்கிய பகுதிகளை இந்த பேரவை நிராகரிக்கிறது. அந்த தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன், அதனை உறுப்பினர்கள் ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டும்" என்றார். பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் ஒருமனதாக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

---

### இந்தியா வந்துள்ள இலங்கை பிரதமரிடம்

# கச்சத்தீவு மீட்பு, தமிழ்நாடு மீனவர் பிரச்சினை குறித்து பேச வேண்டும்

## பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, அக். 17-

**இலங்கையிடமிருந்து கச்சத் தீவை மீட்கவும், இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், கூட்டுப்பணிக் குழுவை மீண்டும் புதுப்பிக்கவும் இந்தியா வந்துள்ள இலங்கை பிரதமரிடம் வலியுறுத்த வேண்டி பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.**

இது தொடர்பாக அரசின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், 'இலங்கையிடமிருந்து கச்சத் தீவை மீட்கவும், இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், கூட்டுப்பணிக் குழுவை மீண்டும் புதுப்பிக்கவும். இந்தியா வந்துள்ள இலங்கை பிரதமரை வலியுறுத்திட வேண்டி பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கை பிரதமரின் மூன்று நாள் புதுடெல்லிப் பயணம் அக்டோபர் 16 முதல் 18-ம் தேதி வரை திட்டமிடப்பட்டுள்ளதை குறிப்பிட்டுள்ள முதல்வர், இந்தப் பயணம், பாக் விரிகுடாவின் பாரம்பரிய மீன்பிடி கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான பிரச்சினைகளை தீர்க்க ஒரு சிறந்த வாய்ப்பை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து நடைபெறும் தாக்குதல்கள், துன்புறுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக தமிழக மீனவ சமூகங்கள் தொடர்ந்து துன்பங்களை எதிர்கொள்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ள முதல்வர், 2021 முதல், 106 வெவ்வேறு சம்பவங்களில் 1,482 மீனவர்களும் 198 மீன்பிடிப் படகுகளும் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் மீனவர்கள் பெரும் துயரத்தையும் பொருளாதார இழப்பையும் எதிர்கொண்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைகளைத் தூதரக நடவடிக்கைகள் மூலம் தீர்க்க இந்திய அரசின் தலையீட்டை தமிழ்நாடு அரசு தொடர்ந்து கோரி வருவதாகவும், இதற்காக, தான் பதினொரு முறை பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளதையும், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு 72 முறை கடிதம் எழுதியுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தச் சிறைப்பிடிப்பு மற்றும் தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், இந்த கீழ்கண்ட முக்கியமான பிரச்சினைகள் குறித்து இலங்கைப் பிரதமரின் வருகையின் போது விவாதிக்கப்பட வேண்டும் என்று தனது கடிதத்தில் முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்கள் பாரம்பரியமாக இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த கச்சத்தீவைச் சுற்றியுள்ள கடல் பகுதியில் மீன்பிடித்து வருகின்றனர். இந்தத் தீவு மத்திய அரசால் மாநில அரசின் முறையான ஒப்புதலைப் பெறாமல் இலங்கைக்கு மாற்றப்பட்டது - இந்த முடிவை 1974 முதல் தமிழ்நாடு சட்டமன்றம் தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இதன் விளைவாக, நமது மீனவர்கள் இப்போது தங்கள் பாரம்பரிய மீன்பிடித் தளங்களுக்குள் செல்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன், அத்துமீறி நுழைவதாகக் கூறி அடிக்கடி துன்புறுத்தப்படுகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில், கச்சத்தீவை மீட்பதற்கும், பாக் விரிகுடா பகுதியில் உள்ள நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பதற்கும், இந்தியாவிற்கு வருகை தரும் இலங்கை பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்திட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், மீனவ சமூகம் எதிர்கொள்ளும் நீண்டகால மற்றும் துயரமான பிரச்சினைகளைத் தீர்க்க இது மிகவும் முக்கியமானதுமாகும் என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது, தமிழ்நாட்டைச் சேர்ந்த 76 மீனவர்களும் 242 மீன்பிடி படகுகளும் இலங்கை வசம் உள்ள நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எதிர்கொள்ளும் துயரத்தைத் தணிக்க, அவர்களை விரைவாகத் தாயகம் திரும்பவும், அவர்களின் படகுகளை இலங்கை அரசிடமிருந்து விடுவிக்கவும் உரிய அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் தங்கள் மீன்பிடி உபகரணங்கள் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்படுவதையும், இலங்கை நாட்டினரால் அடிக்கடி நடத்தப்படும் தாக்குதல்கள் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் குறித்தும் புகார் அளிப்பதாகவும், இந்தப் பிரச்சினையை திறம்பட தீர்க்க மேம்படுத்தப்பட்ட இருதரப்பு பாதுகாப்பு ஒருங்கிணைப்பு மற்றும் நிலையான தூதரக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீன்பிடிச் சட்டத்தில் 2018 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தம், பறிமுதல் செய்யப்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகளை தேசியமயமாக்க வழிவகுத்துள்ளால் அவற்றை மீட்டெடுப்பது சாத்தியமற்றதாகிவிட்டது. இது பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கடுமையான நிதி நெருக்கடியையும் வாழ்வாதார இழப்பையும்

(கடைசி பக்கம் பார்க்க)

---

### புதிய விண்ணப்பதாரர்களுக்கு

# வரும் டிசம்பர் 15 முதல் மகளிர் உரிமைத்தொகை

## துணை முதல்வர் உதயநிதி அறிவிப்பு

சென்னை, அக். 17-

**புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு டிசம்பர் 15-ம் தேதி முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என சட்டப் பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

தமிழக சட்டப்பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மகளிர் உரிமைத் தொகை தொடர்பாக உரையாற்றினார். அப்போது பேசிய அவர், "தமிழகம் மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த இந்தியாவும் திரும்பிப் பார்க்கும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார். கடந்த 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி அண்ணாவின் பிறந்தநாள் அன்று மகளிர் உரிமைத் தொகை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகளிரின் பொருளாதார விடுதலைக்கு வழிவகுக்கும் இந்த திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும் சுமார் ஒரு கோடியே 14 லட்சம் மகளிருக்கு இந்த உரிமைத் தொகையை, முதல்வர் வழங்கி வருகிறார். இதுவரை ரூ.30,000 கோடி உரிமைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், கடந்த 26 மாதங்களாக, 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் துவங்கி, இந்த ஆண்டு வரை, இன்றைக்கு 16 ஆம் தேதி ஏற்கெனவே ஆயிரம் ரூபாய் கொடுத்தாகிவிட்டது.

தமிழ்நாட்டு மகளிருக்கு, இதுவரை கிட்டத்தட்ட ஒரு கோடியே 14 லட்சம் மகளிர் ஒவ்வொருவருக்கும், சுமார் 26 ஆயிரம் ரூபாயை நம்முடைய அரசு கொடுத்துள்ளது. இந்த திட்டத்தில் மேலும் சில மகளிரும் பயன்பெற வேண்டும் என்பதற்காக, சில விதிகளில் முதல்வர் ஸ்டாலின் தளர்த்தி அறிவித்தார். அரசு மானியத்தில் நான்கு சக்கர வாகனம் வைத்திருப்பவர்கள் குடும்பங்கள் உள்ளிட்ட சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது, தமிழகத்தில் நடத்தப்பட்டு வரும் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் பங்கேற்று, மகளிர் உரிமைத் தொகை பெற புதிதாக 28 லட்சம் பெண்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நவம்பர் 14, 2025 அன்று முடிவடைய உள்ளன. இதற்கிடையே, புதிதாக உரிமைத் தொகை கோரி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் வருவாய்த் துறைமூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இவர்களது விண்ணப்பங்கள் வருவாய்த் துறை மூலம் ஆய்வு செய்து நவம்பர் 30க்குள் நிறைவு பெற்று, தகுதியான மகளிருக்கு வரும் டிசம்பர் 15 ஆம் தேதி முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் முடிவெடுத்துள்ளார் என தெரிவித்தார்.

---

### தென்கிழக்கு வங்கக்கடலில்

# வரும் 24-ம் தேதி புதிய புயல் சின்னம்

சென்னை, அக். 17-

**தென்கிழக்கு வங்கக்கடலில் அக். 24-ல் புதிய புயல் சின்னம் உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் கடும் மழைப்பொழிவை கொடுத்த தென்மேற்கு பருவமழை நேற்று விலகியது. இதையடுத்து தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை நேற்று தொடங்கியது. அதேபோல் புதுச்சேரி, காரைக்கால், கேரளா, மாஹே, தெற்கு உள்கர்நாடகம், ராயலசீமா, தெற்கு கடலோர ஆந்திரா பகுதிகளிலும் நேற்று வடகிழக்கு பருவமழை தொடங்கியது.

இதையொட்டி தமிழகத்தில் வருகிற 20-ந்தேதி வரை பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில் தென்கிழக்கு வங்கக் கடல் பகுதியில் வரும் 24-ந் தேதி குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து தமிழ்நாட்டில் கடலோரப் பகுதிகளை நெருங்கி, மேலும் வலுவடைய வாய்ப்பு இருப்பதாக தெரிவித்துள்ளது.

இதற்கிடையே வடகிழக்கு பருவமழை தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மைய தென் மண்டல தலைவர் அமுதா செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது. தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமாக உள்ளது. தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும். கடந்த 24 மணிநேரத்தில் 3 இடங்களில் கனமழை பதிவானது. அதிகபட்சமாக காயன்பட்டினம் திருச்செந்தூரில் 15 செமீ மழை பதிவானது.

அக்.1 - 16 வரை 16 நாட்களுக்கான இயல்பான மழை அளவு 7 செமீ ஆகும். ஆனால் இந்த் காலகட்டத்தில் 10 செமீ மழை பதிவாகியுள்ளது. இதன்மூலம் இயல்பை விட 37% அதிகமாக மழை பதிவாகியுள்ளது. குமரிக்கடல் அருகே வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. வரும் 18 ஆம் தேதியில் கேரளா -கர்நாடகா பகுதிகளுக்கு அப்பால் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது. வரும் 24ஆம் தேதி வாக்கில் தென் கிழக்கு வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக கூடும். இது மேற்கு - வடமேற்கு திசையில் நாகணர்த்து வலுவடைய வாய்ப்புள்ளது. மழை காலங்களில் பல புயல்கள் உருவாக வாய்ப்பு. எத்தனை புயல் உருவாகும் என்பது இப்போது சொல்ல முடியாது அடுத்த 7 தினங்களில் தமிழ்நாட்டில் அநேக இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த 5 நாட்களுக்கு தமிழக மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். சென்னையை பொறுத்தவரை நகரின் சில இடங்களில் மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று அவர் தெரிவித்தார்.

---

# தமிழக கவர்னருக்கு எதிரான வழக்கு: சுப்ரீம் கோர்ட்டில் இன்று விசாரணை

புதுடெல்லி, அக். 17-


**தமிழ்நாடு அரசு கவர்னருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இரண்டு மனுக்களும் இன்று சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வருகிறது.**

தமிழ்நாடு சட்டசபையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக சட்டத்தில் திருத்தம் செய்யும் மசோதாவை நிறைவேற்றியது. இந்த மசோதா மாநில கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. வழக்கமான நடைமுறையின்படி, கவர்னர் மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்கவோ அல்லது விளக்கத்திற்காக திருப்பி அனுப்பவோ வேண்டும். ஆனால் கவர்னர் ஆர்.என்.ரவி அதனை குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யும் வகையில் அனுப்பி வைத்தார். இதற்கு அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

கவர்னரின் இந்த முடிவுக்கு எதிராக தமிழ்நாடு அரசு சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளது. அந்த மனுவில், கவர்னரின் இந்த நடவடிக்கை தன்னிச்சையானது என அறிவிக்க வேண்டும் என்றும் அதேவேளையில், தமிழ்நாடு சட்டசபையில் இயற்றி அனுப்பி வைக்கும் மசோதாக்களை கவர்னர் கையாளும் விதம் அரசியல் சாசனத்திற்கு எதிரானதாக உள்ளது என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தமிழ்நாடு கவர்னருக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு, சுப்ரீம் கோர்ட்டில் இன்று விசாரணைக்கு வருகிறது. கலைஞர் பல்கலை. மசோதாவுக்கு கவர்னர் ஒப்புதல் வழங்காமல் ஜனாதிபதிக்கு அனுப்பியதை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டது. தமிழ்நாட்டு விளையாட்டு பல்கலை. மசோதா வழக்கையும் சேர்த்து விசாரிக்க தமிழ்நாடு அரசு வழக்கறிஞர் ஹரிஷ்குமார் முறையீடு செய்தார். 2 வழக்குகளும் இன்று விசாரிக்கப்படும் என்று தலைமை நீதிபதி உறுதி அளித்தார். இதையடுத்து தமிழ்நாடு அரசு கவர்னருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இரண்டு மனுக்களும் இன்று சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வருகிறது.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
| --- | --- |
| 862.23 | 261.75 |
| பாயின்ட் 83,467.66 | பாயின்ட் 25,585.30 |




**தங்கம்**
1 சவரன் ₹95,200
1 கிராம் ₹11,900



**வெள்ளி**
1 கிலோ ₹206,000
1 கிராம் ₹206.00

**டாலர்** ₹87.94



**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

# பிரேசில் துணை ஜனாதிபதி இந்தியா வருகை



**புதுடெல்லி, அக். 17-**

பிரேசில் துணை ஜனாதிபதி இந்தியா வந்தார்.

பிரேசில் நாட்டின் துணை ஜனாதிபதி மற்றும் அந்நாட்டின் வளர்ச்சி, தொழில்துறை, வர்த்தகம் மற்றும் சேவைகளுக்கான மந்திரி ஜெரால்டோ ஆல்க்மின், அவருடைய மனைவி மரியா லூசியா ஆல்க்மினை அழைத்து கொண்டு இந்தியாவுக்கு வருகை தந்துள்ளார். இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்குடன் இந்தியாவுக்கு மேற்கொண்டுள்ள 3 நாள் பயணத்தின் ஒரு பகுதியாக டெல்லி வந்தடைந்த அவருக்கு, விமான படை சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. மத்திய பாதுகாப்பு துறை மந்திரி ராஜ்நாத் சிங்கை அவர் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். இதனை தொடர்ந்து, இந்திய துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணனை அவர் நேற்று சந்தித்து பேசுகிறார்.

இதன் பின்னர், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை மந்திரி பியூஷ் கோயலையும், பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு மந்திரி ஹர்தீப் சிங் புரியையும் தனித்தனியாக சந்தித்து பேச இருக்கிறார். இன்று அவர், மத்திய வெளிவிவகார மந்திரி ஜெய்சங்கரை சந்தித்து பேச உள்ளார்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகர் பகுதியில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் சார்பில் 110.92 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 230/33 கி.வோ. வளிம காப்பு துணைமின் நிலையத்தை திறந்து வைத்தார்.

### ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்க மாட்டோம்:

# பிரதமர் மோடி கூறியதாக ட்ரம்ப் தகவல்

**வாஷிங்டன், அக். 17-**

ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தன்னிடம் கூறியதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "ரஷ்யாவிடம் இந்தியா எண்ணெய் வாங்குவதில் நான் மகிழ்ச்சியடையவில்லை. அவர்கள் ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்க மாட்டார்கள் என்று மோடி எனக்கு உறுதியளித்தார். உங்களுக்குத் தெரியும், இதை உடனடியாக செய்ய முடியாது. இது ஒரு சிறிய செயல்முறை, ஆனால் செயல்முறை விரைவில் முடிவடையும். ரஷ்யாவை பொருளாதார ரீதியாக தனிமைப்படுத்த இது ஒரு பெரிய படி. இப்போது சீனாவையும் அதையே செய்ய வைக்கப் போகிறோம். மோடி ஒரு சிறந்த மனிதர். அவர் ட்ரம்பை நேசிக்கிறார். நான் அவரது அரசியல் வாழ்க்கையை அழிக்க விரும்பவில்லை.

நான் பல ஆண்டுகளாக இந்தியாவைப் பார்த்து வருகிறேன். அது ஒரு நம்பமுடியாத நாடு, ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு ஒரு புதிய தலைவர் அங்கு இருப்பார். ஆனால், என் நண்பர் மோடி நீண்ட காலமாக அங்கு தலைவராக இருக்கிறார் என்றார் பிரதமர் மோடி அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு இத்தகைய உறுதியை அளித்தாரா என்பது குறித்த மின்னஞ்சல் கேள்விகளுக்கு வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரகம் உடனடியாக பதிலளிக்கவில்லை.

# சட்டப்பேரவையில் நயினாருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்

**சென்னை, அக். 17-**

நயினார் நாகேந்திரனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபை கூட்டத்தொடர் நேற்று தொடங்கி நடைபெற்றது. இந்த நிலையில், நேற்று பிறந்தநாள் கொண்டாடிய அமைச்சர் முத்துசாமி மற்றும் பா.ஜ.க .மாநில தலைவர் நயினார் நாகேந்திரனுக்கு சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

குறிப்பாக நயினார் நாகேந்திரன் குறித்து அவர் பேசும் போது, நயினார் நாகேந்திரனுக்கு பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்யும்போது கூட சிரித்துக்கொண்ட செல்வார்.

கட்சி பாகுபாடின்றி இருக்கக்கூடிய நயினார் நாகேந்திரன் கோபப்பட்டு நான் பார்த்ததே இல்லை. யாரும் கோபம் வராத அளவுக்கு நடந்துகொள்ளக்கூடியவர் நயினார் நாகேந்திரன்.'' என நயினாருக்கு மு.க.ஸ்டாலின் திடீர் புகழாரம் சூட்டியுள்ளார்.

### புதிய உச்சத்தில் தங்கம் விலை:

# பவுன் ரூ.95 ஆயிரத்தை கடந்தது

**சென்னை, அக். 17-**

தங்கம் விலை உயர்ந்து ஒரு சவரன் ரூ.95 ஆயிரத்தை கடந்துள்ளது. இதன்படி நேற்று சென்னையில் ஆபரணத்தங்கம் விலை கிராமுக்கு ரூ.40 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.11,900-க்கும், சவரனுக்கு ரூ.320 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.95,200-க்கும் விற்பனையானது.

தங்கம் விலை தொடர்ந்து ஏற்ற-இறக்கத்தில் காணப்படுகிறது. அதிலும் கடந்த சில நாட்களாக தினமும் காலை மற்றும் பிற்பகலில் தங்கம் விலையில் மாற்றம் இருந்து வருகிறது. இதனால் தங்கம் விலை அதிரடியாக உயர்ந்து வருகிறது. தங்கம் விலை தொடர்ந்து ஏறுமுகம் கண்டு வருவது இல்லத்தரசிகளுக்கு மட்டுமல்ல சுப நிகழ்ச்சிகளை திட்டமிட்டு வைத்திருக்கும் குடும்ப தலைவர்களுக்கும் கடுமையான அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தங்கம் விலை எப்போது இறங்கும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

கடந்த 7-ந்தேதி ஒரு சவரன் ரூ.90 ஆயிரத்தை தாண்டிய நிலையில், 8-ந்தேதி ரூ.91 ஆயிரம், 11-ந்தேதி ரூ.92 ஆயிரம் என உயர்ந்து இருந்தது. இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் ஒரே நாளில் சவரனுக்கு ரூ.1,960 அதிகரித்து, ஒரு சவரன் ரூ.94 ஆயிரம் என்ற உச்சத்தையும் கடந்தது.

இதனையடுத்து நேற்று முன்தினமும் தங்கம் விலை ஏறுமுகத்தில் காணப்பட்டது. கடந்த 3 நாட்களுக்கு முன் ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்து 825-க்கும், ஒரு சவரன் ரூ.94 ஆயிரத்து 600-க்கும் விற்பனை ஆனது. நேற்று முன்தினம் நிலவரப்படி, கிராமுக்கு ரூ.35-ம், சவரனுக்கு ரூ.280-ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்து 860-க்கும், ஒரு சவரன் ரூ.94 ஆயிரத்து 880-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்றும் (வியாழக்கிழமை) தங்கம் விலை உயர்ந்து ஒரு சவரன் ரூ.95 ஆயிரத்தை கடந்துள்ளது. இதன்படி நேற்று சென்னையில் ஆபரணத்தங்கம் விலை கிராமுக்கு ரூ.40 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.11,900-க்கும், சவரனுக்கு ரூ.320 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.95,200-க்கும் விற்பனையானது.

வெள்ளி விலையும் கடந்த ஒரு வாரமாக தினமும் கிராமுக்கு ரூ.5-க்கு குறையாமல் விலை ஏற்றம் கண்டது. ஆனால் நேற்று முன்தினம் கிராமுக்கு ரூ.1-ம், கிலோவுக்கு ரூ.1,000-ம் அதிகரித்து, ஒரு கிராம் ரூ.207-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 7 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் நேற்று வெள்ளி விலை சற்று குறைந்தது. இதன்படி வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1-ம், கிலோவுக்கு ஆயிரம் ரூபாயும் குறைந்து, ஒரு கிராம் ரூ.206-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 6 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

# மெக்சிகோவில் புயலுக்கு 130 பேர் பலி

**மெக்சிகோ சிட்டி,அக். 17-**

மெக்சிகோவில் புயலுக்கு 1 லட்சம் வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்து 130 பேர் உயிரிழந்துள்ளனர்.

மெக்சிகோ நாட்டில் ஆண்டுதோறும் பசிபிக் பெருங்கடலில் தோன்றும் புயலால் பெரும் பாதிப்புகள் ஏற்படும். இந்த நிலையில், நடப்பு ஆண்டில் பிரிசில்லா மற்றும் ரேமண்ட் என 2 புயல்கள் தாக்கின. இதனால், ஹிடால்கோ, புபேல்லா உள்ளிட்ட கடலோர மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இரு புயல்களால், கனமழை, வெள்ளம் ஏற்பட்டு உள்ளது. கடந்த 4 நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் சில பகுதிகளில் நிலச்சரிவுகளும் ஏற்பட்டன. பலத்த காற்றுடன் கூடிய கனமழையால் மின் கம்பங்கள், மரங்கள் ஆகியவை முறிந்தன.

இதனால் மின்வினியோகம் தடைப்பட்டு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. இந்நிலையில், ஹிடால்கோ மாகாணத்தில் கனமழைக்கு 66 பேர் வரை பலியாகி இருந்தனர். இந்நிலையில், கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி ஒரேநாளில் 64 பேர் பலியாகி உள்ளனர். 60 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களை தேடும் பணியும் நடந்து வருகிறது. இதுபற்றி ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் செய்தியாளர்களிடம் கூறும்போது, இந்த அளவுக்கு தீவிர மழை பெய்யும் என எதிர்பார்க்கவில்லை. 1 லட்சம் வீடுகள் பாதிக்கப்பட்டு உள்ளன என்றார்.

நிதி அமைச்சக அதிகாரிகளை சந்திக்க திட்டமிட்டுள்ள அவர், மறுகட்டமைப்பு முயற்சிக்கான பணிகள் பற்றியும் ஆலோசிக்கிறார். இதேபோன்று வெராகுரூஸ் மாகாணமும் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. 29 பேர் பலியானார்கள். 18 பேரை காணவில்லை என தகவல் தெரிவிக்கின்றது. 5 மாகாணங்களில் மின் விநியோகம் பாதிக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல்களின் பரவலும் அதிகரித்து காணப்படுகிறது. அதனை கட்டுப்படுத்தும் முயற்சியில் அதிகாரிகள் இறங்கி உள்ளனர்.

# நயினார் நாகேந்திரன் பிறந்தநாள்: எடப்பாடி பழனிசாமி வாழ்த்து

**சென்னை, அக். 17-**

நயினார் நாகேந்திரன் பிறந்தநாளை முன்னிட்டு எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் தனது 65வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவருக்கு கட்சி தொண்டர்கள், பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் நயினார் நாகேந்திரனுக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

பிறந்தநாள் காணும் தமிழக பா.ஜ.க. தலைவர், திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் நயினார் நாகேந்திரன் அவர்களுக்கு எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீண்ட ஆயுள், உடல் நலத்துடன் தொடர்ந்து மக்கள் சேவையாற்றிட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.என தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடி - காயல்பட்டினத்தில் கன மழை

**தூத்துக்குடி, அக். 17-**

தூத்துக்குடி - காயல்பட்டினத்தில் கன மழை பெய்தது.

தூத்துக்குடி மாவட்டத்தில் 2 நாட்கள் மிக கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் ஆரஞ்சு நிற எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையில் தூத்துக்குடியில் நேற்று முன்தினம் மாலை முதல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இடி-மின்னலுடன் கனமழை பெய்தது. நள்ளிரவிலும் மழை தொடர்ந்து பெய்தது. தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 6.30 மணி முதல் இன்று காலை 6.30 மணி வரை பெய்த மழை அளவு பின்வருமாறு:-அதிகபட்சமாக காயல்பட்டினத்தில் 15.4 செ.மீ., திருச்செந்தூரில் 14.6 செ.மீ., சாத்தான்குளத்தில் 8.4 செ.மீ. அளவில் மழை பெய்தது.


மேலும் இதேபோல் ஸ்ரீவைகுண்டத்தில் 5.6 செ.மீ., குலசேகரன்பட்டினத்தில் 5.5 செ.மீ., ஓட்டப்பிடாரத்தில் 5.4 செ.மீ., தூத்துக்குடி மாநகரில் 4.2 செ.மீ., வேடநத்தத்தில் 4.5 செ.மீ., கழுகுமலை மற்றும் வைப்பார் பகுதிகளில் 3.2 செ.மீ., கோவில்பட்டியில் 3.1 செ.மீ., மணியாச்சியில் 3 செ.மீ., கீழஅரசடியில் 2.5 செ.மீ., கயத்தாறு 1.8 செ.மீ., கடம்பூர் மற்றும் சூரன்குடி பகுதிகளில் 1.7 செ.மீ., எட்டயபுரத்தில் 1.6 செ.மீ. மற்றும் விளாத்திகுளத்தில் 8 மி.மீ., காடல்குடி 7 மி.மீ. என்ற அளவில் தூத்துக்குடி மாவட்டத்தில் மொத்தம் 87.08 செ.மீ. அளவில் மழை பெய்துள்ளது. அதாவது சராசரியாக 4.58 செ.மீ. அளவில் மழை பெய்துள்ளது. தூத்துக்குடியில் இரவு முதல் பெய்து வரும் கன மழை காரணமாக மாநகரின் தாழ்வான பகுதிகளான பழைய மாநகராட்சி பகுதி மற்றும் பேட்டரிக் சர்ச் பகுதி, காந்தி சிலை, மட்டக்கடை எஸ்.எஸ்.பிள்ளை மார்க்கெட் பகுதி, தமிழ் சாலை உள்ளிட்ட பகுதிகளில் சாலைகள் வெள்ளக்காடாக காட்சியளித்தன. பெரைரா தெரு, சின்ன கடை தெரு மத்திய பாகம் காவல் நிலையம், ரெயில் நிலையம் உள்ளிட்ட பல இடங்களில் தண்ணீர் குளம்போல் தேங்கியது.

சந்தை ரோட்டில் உள்ள எஸ்பிஜி கோவில் தெருவில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் வீட்டில் இருந்த மின் சாதன பொருட்கள் அனைத்தும் சேதமாகின. இந்த தெருவில் கால்வாய் பணிகள் நடைபெற்று வருவதால். அங்கே தண்ணீர் செல்ல முடியாமல் வீடுகளுக்குள் புகுந்துள்ளது. இந்த தெரு முழுவதும் அதே நிலைமை ஏற்பட்டுள்ளதால் மக்கள் சிரமத்துக்கு ஆளாகினர். இதேபோல தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலும் மழைநீர் புகுந்ததால் அங்கு வரக்கூடிய மக்கள் சிரமத்துக்கு ஆளாகினர். தூத்துக்குடி மாநகராட்சியில் கழிவுநீர் கால்வாய் மேம்படுத்துவதில் அதிகாரிகள் சரிவர செயல்படாத காரணத்தால், ஒரு நாள் மழைக்கே வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துவிட்டதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

திருச்செந்தூர் சுற்று வட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு முதல் தொடந்து கனமழை பெய்தது. திருச்செந்தூர் கோவில் வளாகத்திற்குள் மழைநீர் புகுந்ததால் பக்தர்கள் சிரமத்துக்கு ஆளாகினர். திருச்செந்தூர் பிரதான சாலையில் முத்தையாபுரம் முதல் முள்ளக்காடு வரை வடிகால் அமைக்கப்படாததால் மழைநீர் செல்ல வழி இல்லாமல் சாலையில் குளம் போல் மழைநீர் தேங்கியது.

இதன் காரணமாக சென்னை, கோவை பெங்களூரு மற்றும் மதுரை உள்ளிட்ட வெளி மாவட்டங்களில இருந்து வரக்கூடிய பஸ்கள் ஊர்ந்து சென்றன. இருசக்கர வாகன ஓட்டிகள் மிகுந்த அவதிக்கு ஆளாகினர்.

**17-10-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** சுகம், பாக்கியம் ஆகியவை குறையும். மன உறுதியும், உற்சாகமும் மறையும். பகைவரால் பிரச்சனைகள் எழலாம். அதிக திறமையுடன் செயல்பட்டாலும் அதிகாரிகள் குறை சொல்வோர்.

**ரிஷபம்:-** தாயிற்சிறந்த கோவிலும் இல்லை எனவே, அன்னையின் உடல் நிலையில் அக்கறை தேவை. எந்த ஒரு காரியத்தையும் யோசித்துச் செய்யாவிட்டால் சிக்கல்கள் எழலாம். வாகன சுகம் குறையும்.

**மிதுனம்:-** பாக்கிய விருத்தி ஏற்படும். தொழில் விரிவாக்கத்துக்கு பெரியவர்களின் துணை இருக்கும். தனவரவு அதிகரிப்பதாலும், புதிய நண்பர்கள் சேர்க்கையால் புதிய உற்சாகம் பிறக்கும்.

**கடகம்:-** தொழில் முதலீடுகளை தள்ளிப் போடுவது நல்லது. சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இருக்க வேண்டிய நாள். படிப்பில் கவனம் இருந்தால் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும்.

**சிம்மம்:-** வியாபாரத்தில் ஏற்படும் பணவரவால் மனத்திருப்தி உண்டாகும். புதிய வாகன யோகம் ஏற்படலாம். அரசுப் பணியில் உள்ளவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் எண்ணியபடி கிடைக்கும்.

**கன்னி:-** உடல் உழைப்பு அதிகமாக, உணவு உண்ண நேரம் இருக்காது. பெண்களின் ஆடம்பரத்தால் வீண் செலவு மற்றும் பணவிரயம் ஏற்படும். தொழிலில் புதிய முதலீடுகளை தள்ளிப் போடுவது நல்லது.

**துலாம்:-** பெண்களின் ஆதரவால் அதிக லாபம் அடைவீர்கள். நல்ல வாகன யோகம் உண்டு. அரசுப் பணிகளில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும்.

**விருச்சிகம்:-** வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை அமையும். முன்னேற்ற வாய்ப்புகள் எதிர்படும். வாழ்க்கையில் ஏற்றம் வரும். உயர் பதவிக்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன.

**தனுசு:-** ஆரோக்கியம் மேம்படுவதோடு, குழந்தை பாக்கியம் ஏற்படும். புகழும், கௌரவமும் ஓங்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறுவார். வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு தனலாபம் உண்டு.

**மகரம்:-** நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நினைத்தபடி எதுவும் நடக்காது. திடீர் நடுக்கம். பயம் ஏற்படும். எதிலும் எச்சரிக்கையுடன் நடக்க வேண்டிய நாள்.

**கும்பம்:-** பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். பேச்சால் எதிர்பாலினரை மயக்கி, காதல் வயப்பட நேரும். தொழில் விரிவாக்கத்துக்கு வங்கிக் கடன்கள் சுலபமாக கிடைக்கும்.

**மீனம்:-** பயணத்தால் நன்மைகள் ஏற்படும். பலவழிகளிலும் தனவரவு உண்டாகும். சிலர் வீடு வாங்கும் எண்ணத்தில் கடனுக்கு முயற்சி செய்வர். புதிய தோழிகள் தோழமை கிடைக்கும்.

# அமேசானில் ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவு: 15 சதவீதம் பேருக்கு பாதிப்பு

**வாஷிங்டென், அக். 17-**

அமேசான் ஊழியர்களை பணி நீக்கம் செய்ய அந்த நிறுவனம் முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவை தலைமையிடமாக கொண்டு அமேசான் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. ஆன்லைன் வர்த்தகம், கிளவுட் கம்ப்யூட்டிங், ஆன்லைன் விளம்பரம், டிஜிட்டல் ஸ்ட்ரிம்மிங், ஏஐ உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அமேசன் நிறுவனம் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

தற்போது சர்வதேச அளவில் பல்வேறு துறைகளிலும் ஏஐ பயன்பாடு அதிகரித்து வருவதால் , வேலை இழப்புகள் அதிகரித்து வருகின்றன. இதற்கு அமேசானும் விதி விலக்கு இல்லை என்று சொல்வது போல, அந்த நிறுவனமும் தற்போது பணி நீக்கம் செய்ய தொடங்கியுள்ளது. எச்ஆர் பிரிவு ஊழியர்களுக்கு போன் அல்லது மெயிலில் பணி நீக்கம் தொடர்பான அறிவிப்புகளை அமேசான் நிறுவனம் கொடுத்து வருகிறது.

எச்.ஆர். பிரிவில் பணியாற்றுவோரில் 15 சதவீதம் பேரை பணி நீக்கம் செய்ய அமேசான் திட்டமிட்டுள்ளது. அதுமட்டுமின்றி பிற பிரிவுகளில் பணியாற்றுவோரையும் பணி நீக்கம் செய்ய அமேசான் நிறுவனம் முடிவு செய்துள்ளது. மொத்தம் எவ்வளவு பேர் வேலையை இழப்பார்கள் என்பது எண்ணிக்கை அடிப்படையில் இன்னும் தெரியவில்லை.

### டிக்கெட் இல்லாமல் ரயில் பயணம்:

# 51 ஆயிரம் பேருக்கு ரூ.2.86 கோடி அபராதம்

**சென்னை, அக். 17-**

டிக்கெட் இல்லாமல் ரயில் பயணம் செய்த 51 ஆயிரம் பேர் மீது ரூ.2.86 கோடி அபராதம் விதிக்கப்பட்டது.

சென்னையில் எக்ஸ்பிரஸ் மற்றும் மின்சார ரெயில் சேவைகளை நாள்தோறும் லட்சக்கணக்கானோர் பயன்படுத்தி வருகின்றனர். இதுவே, பண்டிகை காலங்களில் கட்டுக்கடங்காத கூட்டம் காணப்படும். இதுபோன்ற கூட்ட நெரிசல் நேரங்களில் ஏராளமானோர் ரெயில்களில் முறையான பயணச்சீட்டு இல்லாமல் பயணிப்பது, முன்பதிவு செய்யப்பட்ட பெட்டிகளில் முன்பதிவு செய்யாத பயணிகள் பயணிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவது வாடிக்கையான ஒன்றாக உள்ளது. அவர்கள் மீது ரெயில்வே சட்டம் பிரிவு 138-கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அபராதம் விதிக்கப்படுகிறது.

அந்த வகையில், சென்னை கோட்டத்தில் ஆயுதபூஜை விடுமுறையை முன்னிட்டு கடந்த 25-ந்தேதி முதல் கூடுதல் டிக்கெட் பரிசோதகர்கள் பணியமர்த்தப்பட்டனர். அவர்கள் மக்கள் அதிகம் பயன்படுத்தும் சென்டிரல், எழும்பூர், தாம்பரம் உள்பட முக்கிய ரெயில் நிலையங்களில் தொடர்ந்து சோதனையில் ஈடுபட்டனர். அதன்படி, கடந்த செப்டம்பர் 25-ந்தேதி முதல் அக்டோபர் 10-ந்தேதி வரையில் 15 நாட்களில் ரெயில்களில் டிக்கெட் எடுக்காமல் பயணித்த 51 ஆயிரத்து 557 பேரை பிடித்துள்ளனர். அவர்களிடம் இருந்து ரூ.2 கோடியே 86 லட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளதாக ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து, ரெயில்வே அதிகாரிகள் கூறியபோது, 'ஆயுதபூஜை விடுமுறையின் போது டிக்கெட் இல்லாமல் பயணித்த 50 ஆயிரத்திற்கு மேற்பட்டோரை டிக்கெட் பரிசோதகர்கள் பிடித்துள்ளனர். அதில் மின்சார ரெயில்களில் டிக்கெட் எடுக்காமல் பயணம் செய்பவர்களே அதிகம் உள்ளனர்' என்றார்கள்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

# தமிழ்நாடு முழுவதும் சிறப்பு பஸ்கள் இயக்கம் தொடக்கம்

**சென்னை, அக். 17-**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் நேற்று முதல் 4 நாட்களுக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.

தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் கல்வி , வேலை வாய்ப்பு, தொழில், வியாபாரம் என பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு மாவட்ட மக்களும் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தீபாவளி, பொங்கல் உள்ளிட்ட முக்கிய பண்டிகைகளின்போது சொந்த ஊருக்கு செல்வது வழக்கம். தற்போது தீபாவளி பண்டிகை வருகிற 20-ந்தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில், பலரும் சொந்த ஊருக்கு செல்ல அரசு பஸ்கள், ரெயில்கள் மற்றும் ஆம்னி பஸ்களில் பயணிக்க தொடங்கிவிட்டனர். இதை கருத்தில் கொண்டு தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் 20 ஆயிரத்து 378 சிறப்பு பஸ்கள் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவே அரசு பஸ்களில் தீபாவளி பண்டிகைக்கான முன்பதிவு 3 மாதங்களுக்கு முன்பே தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் நேற்று முதல் 4 நாட்களுக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது. சென்னையில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் 2,092 பஸ்களுடன், 760 சிறப்பு பஸ்களும், பல்வேறு இடங்களிலிருந்து 565 பஸ்களும் இயக்கப்பட உள்ளன. இதனிடையே , தீபாவளி பண்டிகைக்காக சொந்த ஊர்களுக்கு செல்ல அரசு பஸ்களில் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 500 பேர் முன்பதிவு செய்துள்ளனர். அதாவது 16-ந்தேதி நேற்று வியாழக்கிழமை 16 ஆயிரம் பேர், 17-ந்தேதி வெள்ளிக்கிழமை 51 ஆயிரத்து 500 பேர், 18-ந்தேதி சனிக்கிழமை 47 ஆயிரத்து 500 பேர், 19-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை 11 ஆயிரத்து 500 பேர் என மொத்தம் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 500 பேர் முன்பதிவு செய்துள்ளனர். இதே போன்று தனியார் ஆம்னி பஸ்களில் 16-ந்தேதி நேற்று வியாழக்கிழமை 28 ஆயிரம் பேரும், 17-ந்தேதி வெள்ளிக்கிழமை 54 ஆயிரம் பேர், 18-ந்தேதி சனிக்கிழமை 48 ஆயிரம் பேர், 19-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை 28 ஆயிரம் பேர் என மொத்தம் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பேர் முன்பதிவு செய்துள்ளனர்

## ஆந்திராவில் ரூ.13,430 கோடி மதிப்பிலான

# புதிய திட்டங்களை துவக்கி வைத்தார் பிரதமர் மோடி



**அமராவதி, அக். 17-**

ஆந்திராவில் ரூ.13,430 கோடி மதிப்பில் திட்ட பணிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

ஆந்திர மாநிலத்தில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக பிரதமர் மோடி நேற்று வருகை தந்துள்ளார். முன்னதாக கர்னூல் மாவட்டத்திற்கு விமானம் மூலம் வந்திறங்கிய பிரதமர் மோடியை, ஆந்திர முதல்வர்சந்திரபாபு நாயுடு, கவர்னர் அப்துல் நசீர் ஆகியோர் நேரில் சென்று வரவேற்றனர்.

இதையடுத்து பிரதமர் மோடி ஸ்ரீசைலத்தில் உள்ள ஸ்ரீ பிரம்மாரம்ப மல்லிகார்ஜுன சுவாமி கோவிலுக்கு சென்றார். ஜோதிர்லிங்கமும், சக்தி பீடமும் ஒரே இடத்தில் அமைந்திருப்பது இந்த கோவிலின் தனிச்சிறப்பாகும். அங்கு சென்று பிரதமர் மோடி ருத்ராபிஷேக பூஜை செய்து வழிபட்டார். அவருடன் முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண் ஆகியோர் உடன் இருந்தனர்.

இதன் பிறகு சிவாஜி ஸ்பூர்த்தி கேந்திராவுக்கு பிரதமர் மோடி சென்றார். அதனை தொடர்ந்து கர்னூல் மாவட்டத்திற்கு சென்ற பிரதமர் மோடி, அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஆந்திராவின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட இருக்கும் ரூ.13,340 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இதன்படி தொழில்துறை, மின்சாரம், சாலைகள், ரெயில்வே, பாதுகாப்பு உற்பத்தி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆகிய துறைகள் சார்ந்த திட்டங்களை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்துள்ளார்.

குறிப்பாக கர்னூல்-III துணை மின் நிலையத்தில் ரூ.2,880 கோடி முதலீட்டில் மின்பகிர்மான அமைப்பை வலுப்படுத்தும் திட்டத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். அதே போல், ரூ.4,920 கோடி முதலீட்டில் கர்னூலில் ஓர்வக்கல் தொழிற்பேட்டை மற்றும் கடப்பாவில் கொப்பர்த்தி தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்திற்கு மோடி அடிக்கல் நாட்டியுள்ளார். அதைத் தொடர்ந்து, ரூ.960 கோடி செலவில் சப்பாவரம்-ஷீலாநகர் வரையிலான 6 வழி பசுமை நெடுஞ்சாலை அமைக்கும் திட்டம், ரூ.360 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணா மாவட்டத்தில் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் சார்பில் தொழிற்சாலை அமைக்கும் திட்டம், ரூ.1,730 கோடி செலவில் கெயில் இந்தியா லிமிடெட் சார்பில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீகாகுளம்-அங்குல் இயற்கை எரிவாயு குழாய் பாதை மற்றும் ரூ.1,200 கோடி மதிப்பிலான பல்வேறு ரெயில்வே திட்டங்களுக்கு பிரதமர் மோடி நேற்று அடிக்கல் நாட்டினார்.

## தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது

**சென்னை, அக். 17-**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது.

இந்தியாவில் ஜூன் 1-ந் தேதி முதல் செப்டம்பர் 30-ந் தேதி வரை பெய்யும் மழை தென்மேற்கு பருவமழையாகவும், அக்டோபர் 1-ந் தேதி முதல் டிசம்பர் 31-ந் தேதி வரை பெய்யும் மழை வடகிழக்கு பருவமழையாகவும் பதிவு செய்யப்படுகிறது. இந்தியாவே தென்மேற்கு பருவமழையை நம்பி இருந்தாலும், தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழைதான் அதிகமாக பெய்யும்.

இந்தநிலையில் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை நேற்று தொடங்கியதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கடந்தாண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழ்நாட்டில் 58.9 சென்டி மீட்டர் மழை பெய்த நிலையில் இந்தாண்டு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. வடகிழக்கு பருவமழை இயல்பைவிட இந்தாண்டு அதிகரித்து காணப்படும் என வானிலை ஆய்வு மையம் முன்னதாக தெரிவித்துள்ளது.

## குற்றால அருவிகளில் குளிக்க சுற்றுலாபயணிகளுக்கு தடை

**தென்காசி, அக். 17-**

குற்றால அருவிகளில் குளிக்க சுற்றுலாபயணிகளுக்கு மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நேற்று முதல் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளது. கடலோர தமிழகம் மற்றும் அதனையொட்டிய குமரிக்கடல் பகுதிகளில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் நேற்று முதல் 3 நாட்களுக்கு பெரும்பாலான மற்றும் அனேக இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனிடையே, தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் தற்போது பரவலாக மழை பெய்ய தொடங்கிவிட்டது. தென்காசி மாவட்டத்தையொட்டிய மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பரவலாக கனமழை பெய்து வருகிறது. இதனால் குற்றால அருவிகளில் திடீரென நீர்வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால், பாதுகாப்பு கருதி குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐந்தருவி, மெயின் அருவியில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 3 தினங்களுக்கு முன்பு வெள்ளப்பெருக்கு காரணமாக குளிக்க தடை விதிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் சீராக தண்ணீர் விழுந்ததால், குளிக்க அனுமதிக்கப்பட்டது. இந்த நிலையில், மீண்டும் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றமடைந்தனர்.

## அவரின் தியாகம் என்றும் போற்றப்படும்:

# கட்டபொம்மனின் நினைவு நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி

**சென்னை, அக். 17-**

கட்டபொம்மனின் தியாகம் தமிழ் மண்ணின் தன்மான உணர்வுக்குச் சான்றாக என்றும் போற்றப்படும் என்று அவரது நினைவு நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

விடுதலை போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்



கூறியிருப்பதாவது:-

அந்நிய ஆதிக்கத்துக்கு அடிபணிந்து வரிகட்ட மறுத்து, அஞ்சா நெஞ்சனாகப் போர் நடத்திய விடுதலை நாயகர் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களது நினைவு நாள் சிப்பாய்ப் புரட்சிக்குப் பல ஆண்டுகள் முன்னரே விடுதலைப் போராட்ட உணர்வைப் பரவச் செய்து, உறுதி குலையாமல் போராடி உயிர் துறந்த பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரராம் கட்டபொம்மனின் தியாகம் தமிழ் மண்ணின் தன்மான உணர்வுக்குச் சான்றாக என்றும் போற்றப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கிட்னி திருட்டு விவகாரம்:

# சிறப்பு புலனாய்வு குழு விசாரிக்க எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

**சென்னை, அக். 17-**

கிட்னி திருட்டு சிறப்பு புலனாய்வு குழு விசாரணையை தொடங்க வேண்டும் என்று இ.பி.எஸ். வலியுறுத்தியுள்ளார்.

சட்டசபையில் கிட்னி திருட்டு தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

விசைத்தறி தொழிலாளர்களின் வறுமையை பயன்படுத்தி கிட்னி திருட்டு நடைபெற்றுள்ளது. ஏழை மக்க



ளின் கிட்னியை திருடிய மருத்துவமனை மீது தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசின் விசாரணை குழுவில் இடம் பெற்றுள்ளவர்கள் பாதிக்கப்பட்டோரை விசாரித்துள்ளனர். கிட்னி முறைகேடு நடந்துள்ளதை விசாரணை குழு உறுதி செய்துள்ளது.

உயர்நீதிமன்ற மதுரை கிளை அமைத்த சிறப்பு புலனாய்வு குழுவிற்கு எதிராக தமிழக அரசு மேல்முறையீடு செய்துள்ளது. சிறப்பு புலனாய்வு குழு உடனடியாக விசாரணையை தொடங்க தமிழக அரசு வழிவகை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## கரூர் சம்பவத்திற்கு பிறகும் குறையவில்லை:

# த.வெ.க.வுக்கு பொதுமக்கள் மத்தியில் 23 சதவீதம் ஆதரவு

### புதிய கருத்துக்கணிப்பில் தகவல்

**சென்னை, அக். 17-**

புதிய கருத்துக்கணிப்பில் த.வெ.க.வுக்கு பொதுமக்கள் மத்தியில் 23 சதவீதம் ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய் அரசியல் பயணம் தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியது. தொடர்ந்து விக்கிரவாண்டியில் நடந்த முதல் மாநில மாநாட்டின் மூலம் மேலும் த.வெ.க.வின் அரசியல் செல்வாக்கு அதிகரித்தது. அரசியல் வட்டாரங்கள் மட்டுமின்றி பொதுமக்கள்மத்தியிலும் த.வெ.க.வின் அரசியல் பணிகள் பேசும் பொருளானது.

இந்நிலையில் பிரபல அரசியல் ஆலோசகரான பிரசாந்த் கிஷோர் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழகம் முழுவதும் தனது குழுவினர் மூலம் கருத்துக்கணிப்பு எடுத்தார். கருத்துக்கணிப்பு முடிவுகளின் படி த.வெ.க.வுக்கு 15 முதல் 20 சதவீதம் வாக்குகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டன. தொடர்ந்து கடந்த மே மாதம் மும்பையில் உள்ள பிரபல நிறுவனம் எடுத்த சர்வே முடிவில், வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் 95 முதல் 105 இடங்கள் பிடிக்கும் என தெரிவித்திருந்தது.

இந்த கருத்துக்கணிப்பு முடிவுகள் பிரபல அரசியல்



கட்சிகளின் பார்வையை த.வெ.க. பக்கம் தீவிரமாக திரும்பச் செய்தது. த.வெ.க. செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் சமூக வலைதளங்களில் வைரலாகி வந்தன. இதைத் தொடர்ந்து த.வெ.க.வின் அடுத்தடுத்த அதிரடி அறிவிப்புகளை விஜய் வெளியிட்டு வந்தார். அந்த வகையில் த.வெ.க.வின் 2-ம் மாநில மாநாடு மதுரையில் கடந்த ஆகஸ்ட் 21-ந்தேதி நடந்தது. மாநாட்டில் திரண்ட லட்சக் கணக்கான கூட்டமும் விஜயின் பேச்சுக்களும் தமிழகத்தில் பெரும் அதிர்வை ஏற்படுத்தின.

அடுத்த அதிரடியாக விஜய் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயண திட்டத்தை அறிவித்தார். முதற்கட்டமாக திருச்சி, அரியலூரிலும் 2-வது கட்டமாக நாகப்பட்டினம், திருவாரூரிலும் விஜய் பிரசாரம் செய்தார். பிரசாரத்தின் போது திரண்ட கட்டுக்கடங்காத கூட்டத்தால் சுற்றுப்பயணத்தில் தாமதம் ஏற்பட்டது.3-வது கட்டமாக த.வெ.க. தலைவர் விஜய் கரூரில் பிரசாரம் செய்தார். அப்போது திடீரென ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தமிழகத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இது தொடர்பாக த.வெ.க. நிர்வாகிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் இந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில் கரூர் சம்பவத்திற்கு பிறகு த.வெ.க. செல்வாக்கு எப்படி இருக்கிறது என்பது குறித்து மீண்டும் தமிழகம் முழுவதும் தற்போது பிரபல அரசியல் கட்சியின் தகவல் தொழில்நுட்ப பிரிவு சார்பில் கருத்துக்கணிப்பு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. கருத்துக்கணிப்பு முடிவில் கரூர் சம்பவத்தால் விஜய்க்கு செல்வாக்கு குறையவில்லை எனவும் த.வெ.க.வுக்கு பொதுமக்கள் மத்தியில் 23 சதவீதம் ஆதரவு இருப்பதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வு முடிவுகள் சமூக வலைதளங்களில் வைரலாக செய்திகள் பரவி வருகிறது.

## தனிக்கட்சி ஆரம்பிப்பது நல்லது: அன்புமணிக்கு ராமதாஸ் பதில்

**விழுப்புரம், அக். 17-**

ஒரு தனிக்கட்சி ஆரம்பித்துக் கொள். அது உனக்கும் நல்லது, உன்னை சுத்தியிருக்கும் அந்தக் கூட்டத்திற்கும் நல்லது என்று அன்புமணிக்கு ராமதாஸ் காட்டமாக பதிலளித்துள்ளார்.

அப்போது அவர் பேசியதாவது;- ஒரு பரிசோதனைக்காக அப்பல்லோ மருத்துவமனையில் நானே சேர்ந்தேன். 12 ஆண்டுக்கு முன் எனக்கு இதய அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். அந்த ரத்தக்குழாய்கள் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்வதற்காக, மருத்துவர்களிடம் பரிசோதிக்க சொன்னேன். அவர்களும் பரிசோதித்து விட்ட நல்ல நிலையில் இருப்பதாக கூறியதால், மறுநாளே நான் வீடு திரும்பி விட்டேன். நான் மருத்துவமனையில் இருந்தபோது அனைத்து அரசியல் கட்சியினரும் நேரிலும், தொலைபேசியிலும் நலம் விசாரித்தனர். ஒரு கட்சி மட்டும்தான் நலம் விசாரிக்கவில்லை. அது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கட்சி.

ஐயாவுக்கு ஏதாவது ஆச்சுனால் தொலைத்து போடுவேன். சும்மா இருக்க மாட்டேன். வேடிக்கை பார்க்க மாட்டேன். ஐயாவை வைத்து நாடகமாடிட்டு இருக்காணுங்க,' என்று எல்லாம் அன்புமணி பேசினார். ஐயாவை பார்க்க துப்பு இல்லை. படிக்காத மாடு மேய்க்கும் சிறுவன் கூட இப்படிபட்ட சொற்களை பேசியிருக்க மாட்டார். அதனால் தான் நிர்வாகக் குழுவில் 'அன்புமணிக்கு தலைமைப்பண்பு இல்லை' என்றேன். நோய் தொற்றும் அளவுக்கு நான் வியாதியில் இல்லை. இப்பவும் சொல்றேன். ஒரு தனிக்கட்சி ஆரம்பித்துக் கொள். அது உனக்கும் நல்லது, உன்னை சுத்தியிருக்கும் அந்த கூட்டத்திற்கும் நல்லது. பொறுப்பு மட்டும் தான் கிடைக்கும். எம்எல்ஏ, எம்.பி. பதவி எல்லாம் கிடைக்காது. இவ்வாறு பேசினார்.

## கிட்னிகள் ஜாக்கிரதை பேட்ஜ் அணிந்து

# சட்டசபை நிகழ்வில் பங்கேற்ற அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள்..!

**சென்னை, அக். 17-**

தமிழக சட்டசபையில் கிட்னிகள் ஜாக்கிரதை பேட்ஜ் அணிந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்றனர்.

தமிழக சட்டசபை கூட்டம் கடந்த 14-ந்தேதி காலை 9.30 மணிக்கு கூடியது. கூட்டம் தொடங்கியதும் திருக்குறள் வாசிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் 8 பேர் மறைவுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டது. தொடர்ந்து, 2 மணித்துளிகள் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன்பின்னர், கரூரில் நடைபெற்ற துயர சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, மறைந்த கேரள மாநில முன்னாள் முதல்வர் வி.எஸ்.அச்சுதானந்தன், ஜார்கண்ட் மாநில முன்னாள் முதல்வர் சிபுசோரன்,



நாகாலாந்து முன்னாள் கவர்னர் இல.கணேசன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் சுதாகர் ரெட்டி, ஐ.ஏ.எஸ். அதிகாரி டாக்டர் பீலா வெங்கடேசன் ஆகியோர் மறைவுக்கும் இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் 2-ம் நாள் தமிழக சட்டசபை கூட்டம் கூடியது. இந்த கூட்டத்தில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் கருப்பு பட்டை அணிந்து வருகை தந்தது பரபரப்பாக பார்க்கப்பட்டது. பின்பு, கேள்வி நேரம் தொடங்கி நடந்தது. உறுப்பினர்கள் ஒவ்வொருவராக அவையில் பேசினர்.

தொடர்ந்து, கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்து பேசினார். இந்நிலையில், தமிழக சட்டசபையின் 3-ம் நாள் கூட்டம் நேற்று தொடங்கி நடந்தது. கூட்டத்திற்கு கிட்னிகள் ஜாக்கிரதை என்ற பேட்ஜ் அணிந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்றனர்.

## என் பள்ளி என் பெருமை என்ற தலைப்பில் போட்டி:

# வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம், பாராட்டு சான்றிதழ்

**சென்னை, அக். 17-**

என் பள்ளி என் பெருமை என்ற தலைப்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற 70 நபர்களுக்கு பதக்கம், பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டன.

கல்வி வளர்ச்சி நாளைக் கொண்டாடும் விதமாக செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் தற்போது கல்வி பயிலும் மாணவர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்குபெறும் வகையில் "என் பள்ளி! என் பெருமை!!" என்ற தலைப்பில் சமூக ஊடகங்களான எக்ஸ் தளம், இன்ஸ்டாகிராம், முகநூல் , வாட்ஸ்-அப் , யூடியூப் வாயிலாகப் 10 வகையிலானப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் மொத்தம் 9,252 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் "என் பள்ளி என் பார்வையில்" என்ற போட்டியில் 7 நபர்களும், "நான் என் பள்ளியின் பேச்சாளன்" என்ற போட்டியில் 7 நபர்களும், "என் பள்ளி என் கலை" என்ற போட்டியில் 7 நபர்களும், "என் அன்பான ஆசிரியை, ஆசான்" என்ற போட்டியில் (மாணவர்கள்) 7 நபர்களும், "என் கதை என் எழுத்தில்" என்ற போட்டியில் 7 நபர்களும், "என் பள்ளி என் நினைவு" என்ற போட்டியில் 7 நபர்களும், "பள்ளிக்கூடம் வந்தேனே" என்ற போட்டியில் 7 நபர்களும், "என் அன்பான ஆசிரியை, ஆசான்" என்ற போட்டியில் (முன்னாள் மாணவர்கள்) 7 நபர்களும், கல்விக்கான தமிழ்நாடு அரசின் திட்டங்கள்" என்ற போட்டியில் 7 நபர்களும், "என் முன்னெடுப்புகள்" என்ற ரீல்ஸ் போட்டியில் 7 நபர்களும் என 70 நபர்கள் வெற்றி பெற்றவர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியும், நேற்று (16-10-2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "என் பள்ளி! என் பெருமை என்ற தலைப்பில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற 70 நபர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி வாழ்த்தி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராம், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலாளர் சுதன், (ஓய்வு), பள்ளிக் கல்வித்துறை முனைவர். ச. கண்ணப்பன் கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) இரா. பாஸ்கர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள், பள்ளிக் கல்வித் துறை அலுவலர்கள் மற்றும் ஊடக மைய அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஏமனில் கேரள செவிலியரின் மரண தண்டனை நிறுத்திவைப்பு

### சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு தகவல்

**ஏமன், அக். 17-**

ஏமனில் மரண தண்டனையை எதிர்கொண்டுள்ள இந்திய செவிலியர் நிமிஷா பிரியாவின் கதி குறித்து நிச்சயமற்ற தன்மை நிலவி வருகிறது. இந்நிலையில் அவரது மரண தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டில் தெரிவித்துள்ளது. நீதிபதி விக்ரமநாத் மற்றும் நீதிபதி சந்தீப் மேத்தர் ஆகியோர் அடங்கிய அமர்வில் மத்திய அரசின் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான அட்டர்னி ஜெனரல் ஆர். வெங்கடரமணி இந்த தகவலை தெரிவித்தார்.

இந்த விஷயத்தில் மத்தியஸ்தம் செய்ய ஒரு புதிய மத்தியஸ்தர் முன்வந்துள்ளார். இந்த விஷயத்தில் எந்த பாதகமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது நல்ல செய்தி" என்று அவர் தெரிவித்தார். இதைத்தொடர்ந்து விசாரணை ஜனவரி 2026 க்கு பட்டியலிடப்பட்டுள்ளது. கேரள மாநிலம் பாலக்காட்டை சேர்ந்தவர் நிமிஷா பிரியா. ஏமன் நாட்டில் ஒரு மருத்துவமனையில் நர்சாக பணிபுரிந்து வந்த அவர், அதே நாட்டை சேர்ந்த தலால் அப்தோ மஹ்தி என்பவரின் கொலை வழக்கில் கடந்த 2017-ம் ஆண்டு



கைது செய்யப்பட்டார். புதிதாக ஆஸ்பத்திரி தொடங்க திட்டமிட்டு செயல்பட்டு வந்தநிலையில், அவர்களுக்கிடையே நடந்த தகராறு காரணமாக இந்த கொலை நடந்ததாக கூறப்படுகிறது. இந்த கொலை வழக்கை விசாரித்த ஏமன் நாட்டு நீதிமன்றம், செவிலியர் நிமிஷா பிரியா கொலை குற்றவாளி என்று அறிவித்து அவருக்கு 2020-ம் ஆண்டு மரண தண்டனை விதித்தது. அவரது மரண தண்டனையை ஏமன் உச்ச நீதித்துறை கவுன்சில் 2023-ம் ஆண்டு உறுதி செய்தது. நிமிஷா பிரியாவை காப்பாற்ற அவரது குடும்பத்தினர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் மத்திய அரசும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

## இன்று புதிய அமைச்சரவை பதவியேற்பு:

# குஜராத்தில் 16 அமைச்சர்கள் ராஜினாமா

**குஜராத், அக். 17-**

இன்று புதிய அமைச்சரவை பதவியேற்க உள்ள நிலையில் குஜராத் பா.ஜ.க. அரசின் அமைச்சரவையில் உள்ள 16 அமைச்சர்களும் நேற்று கூட்டாக ராஜினாமா செய்தனர்.

அமைச்சரவை மாற்றம் நடைபெற இருந்த நிலையில் நேற்று முதல்வர் பூபேஷ் படேலை தவிர அனைவரும் கூட்டாக ராஜினாமா செய்தனர். முதல்வரின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது. குஜராத் பா.ஜ.க. தலைவர் ஜெகதீஷ் விஸ்வகர்மா, மாநில அமைச்சரவையை முழுமையாக மறுசீரமைக்க வசதியாக அமைச்சர்களை பதவி விலகுமாறு உத்தரவிட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. கூட்டத்தைத் தொடர்ந்து, 16 அமைச்சர்களும் தங்கள் ராஜினாமா கடிதங்களை முதலமைச்சரிடம் சமர்ப்பித்தனர். நேற்று இரவு ஆளுநர் ஆச்சார்யா தேவ்விரத்திடம் அவற்றை பூபேஷ் படேல் ஒப்படைக்க உள்ளார். புதிய அமைச்சரவை இன்று (வெள்ளிக்கிழமை) காலை 11.30 மணிக்கு காந்திநகரின் மகாத்மா மந்திரில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா முன்னிலையில் அறிவிக்கப்பட உள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



இந்தியா ரஷ்யாவிடம் இருந்து எண்ணெயை வாங்காது என்று ட்ரம்ப் முடிவு செய்து அறிவிக்க அனுமதித்தது, ஆபரேஷன் சிந்தூர் குறித்த ட்ரம்ப்பின் கருத்துக்களுக்கு முரண்படாமல் இருப்பது போன்றவை பிரதமர் மோடி அமெரிக்க அதிபர் டிரம்ப்பை கண்டு பயப்படுவதை காட்டுகிறது.

**- ராகுல் காந்தி**



தமிழர்கள் உயிரிழக்கக் காரணமான துயர நிகழ்விற்காகத் தமிழர்களிடம் நடைபெறும் நீதி விசாரணையில் தமிழ் நன்கு தெரிந்த அதிகாரி இடம்பெறுவதுதானே சரியானதாக இருக்க முடியும்? விசாரணையில் தமிழ் அதிகாரிகள் இடம்பெறக்கூடாது என்ற நிபந்தனையை விதித்ததன் மூலம் சுப்ரீம் கோர்ட் ஒட்டுமொத்த தமிழ் அதிகாரிகளின் நேர்மையை சந்தேகிக்கிறதா?

**- சீமான்**



தனியார் சுயநிதி கல்லூரிகள், அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகள் ஆகியவற்றை தனியார் பல்கலைக்கழகங்களாக மாற்ற அரசு அனுமதிப்பதன் மூலம் கல்வியிலும் இட ஒதுக்கீடு முடியும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சமூகநீதிக்கு எதிரான இந்த சட்டத் திருத்த முன்வரைவை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும்.

**- அன்புமணி**



கொள்முதல் நிலையங்களுக்கு வரும் நெல் முழுவதும் கொள்முதல் செய்ய வேண்டும். நேரடி கொள்முதல் மையங்களில் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் மூட்டைகள் வரை அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. தொடர் மழையால் அறுவடை செய்யப்பட்ட நெல் மழையில் நனைந்து சேதமடைந்து விட்டதால் விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும்.

**- வீரபாண்டியன்**

# சென்னை மாநகராட்சியில் 26 புதிய வாகனங்களின் பயன்பாடு: மேயர் ஆர்.பிரியா கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்



**சென்னை,அக்.17**

மேயர் ஆர்.பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலை பராமரிப்புப் பணிகளுக்காக 21 மின்கல வாகனங்கள் மற்றும் நாய்களைப் பிடிக்கும் 5 வாகனங்கள் என 26 புதிய வாகனங்களின் பயன்பாட்டினை (16.10.2025) ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

**வாகனம்**

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் பராமரிப்புப் பணிகளை சாலைப்பணியாளர்கள் மேற்கொள்வதற்கு ஏதுவாக, IDBI வங்கி மற்றும் எக்விட்டாஸ் வங்கியின் சார்பில் பெருநிறுவன சமூகப் பங்களிப்பு நிதியின் கீழ் வழங்கப்பட்ட 21 மின்கல வாகனங்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சியில் தெரு நாய்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்காக 23 எண்ணிக்கையில் நாய் பிடிக்கும் வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், பொதுமக்களுக்கு இடையூறாக தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களைப் பிடித்து வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி செலுத்துதல், கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்திடும் வகையில், மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் தலா ரூ.10.43 இலட்சம் என மொத்தம் ரூ.52.17 இலட்சம் மதிப்பீட்டிலான 5 நாய் பிடிக்கும் வாகனங்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கபப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, துணை ஆணையாளர் (வருவாய் மற்றும் நிதி) பிரதிவிராஜ், நிலைக் குழுத் தலைவர்கள் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொது சுகாதாரம்), திருமதி சர்பஜெயாதாஸ் (வரி விதிப்பு (ம) நிதி), த.விஸ்வநாதன் (கல்வி), ஐடிபிஐ வங்கியின் மண்டல தலைமை பொது மேலாளர் மஞ்சுநாத் பாய், ஈக்விடாஸ் சிறு நிதி வங்கியின் துணைத் தலைவர் டி.அஞ்சான், மண்டல மேலாளர் யு.கமல்நாத் மற்றும் மாநகராட்சி தலைமைப் பொறியாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவொற்றியூரில் தொண்டர் இயக்கத்தினர் டார்ச் லைட் அடித்து நூதன போராட்டம்



**திருவொற்றியூர் அக்.17**

சென்னையை அடுத்த திருவொற்றியூர் தேரடி அருகே உள்ள எல்லை யம்மன் கோவில் தெருவில் 15 ஆண்டுகளுக்கு முன்பு பொது மக்களுக்கு பயன்பட்டு வந்த கேசவன் பூங்கா தற்போது அங்கு இல்லை.அந்த பூங்காவை சில பேர் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி உள்ளனர். இதுகுறித்து தொண்டர் இயக்கம் சார்பில் பலமுறை போராட்டம் நடை பெற்றுள்ளது.

அதேபோல் மீண்டும் நேற்று நூதனபோராட்டத்தை திருவொற்றியூர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்க முன்னாள் தலைவரும் தொண்டர்இயக்க தலைவரான தொண்டன் சுப்பிரமணி தனது கட்சியினருடன் இணைந்து போராட்டம் நடத்தினார்.

திருவொற்றியூர் காவல் துறை அனுமதியுடன் மண்டலஅலுவலகம் முன்பு 35 பெண் தொண்டர்கள் மற்றும் வழக்கறிஞர் சுரேந்தர் சட்டக் கல்லூரி மாணவி ரூபஸ்ரீ குருரமேஷ் ஆகியோருடன் இணைந்து மண்டல அலுவலகம் முன்பு கையில் 38 டார்ச் லைட்டுடன் சென்று மண்டல குழு தலைவர் மற்றும் மண்டல உதவி ஆணையரை கேட்டு கேசவன் பூங்காவை ஆக்கிரமித்தவர்கள் மீது நடவடிக்கை வேண்டுமெனஆர்ப்பாட்டம்நடத்தினார்



**சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் மண்டலம்7வது வட்டத்திற்கு உட்பட்ட ஹன்சா பூங்காவில் பொது மக்கள் கோரிக்கையை ஏற்று அதிமுக மாமன்ற கவுன்சிலர் டாக்டர் கே. கார்த்திக் ஆய்வு மேற்கொண்டார்.உடன் மேற்கு வட்ட செயலாளர் எம்.கண்ணன், இளைஞர் பாசறை செயலாளர் ராஜேஷ், கிழக்கு வட்ட அம்மா பேரவை செயலாளர் சுப்பிரமணியம் பாளையத்தான்,பொன்.செல்வம், ரஞ்சித் ஆகியோர் உள்ளனர்.**

# வேப்பேரி பகுதியில் மூதாட்டியிடம் தங்கநகைகளை பறித்த வாலிபர் கைது

**சென்னை அக் 17-**

சென்னை, சூளை, ராகவா தெருவில் உள்ள வீட்டில் முதல் தளத்தில் மகனுடன் வசித்து வரும் மூதாட்டி தேவகி, என்பவர் கடந்த 13.ந் தேதி அன்று மதியம் வீட்டில் தனியாக இருந்த போது, அங்கு வந்த நபர் ஒருவர் கார்ப்பரேஷனில் இருந்து வருவதாக கூறி அறிமுகப்படுத்திக் கொண்டு, வீட்டிற்குள் நுழைந்து கத்தியைக்காட்டி மிரட்டி, தேவகி அணிந்திருந்த 2 வளையல்கள் மற்றும் 1 தங்கச்செயின் என சுமார் 5 சவரன் தங்க நகைகளை பறித்துக்கொண்டு தப்பிச்சென்றார்.

இது குறித்து தேவகியின் மகன் கண்ணன், என்பவர் வேப்பேரி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

G-1 வேப்பேரி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்தும், சம்பவயிடத்தின் அருகில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளுடன் மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி அருண்குமார், என்பவரை கைது செய்தனர்.அவரிடமிருந்து சுமார் 5 சவரன் தங்க நகைகள் மீட்கப்பட்டு 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி அருண்குமாருக்கு சரியான வேலை இல்லாததாலும், தீபாவளி பண்டிகை கொண்டாட பணம் இல்லாததாலும் மேற்படி மூதாட்டியின் வீட்டில் நுழைந்து கத்தியைக்காட்டி மிரட்டி தங்க நகைகளை பறித்து சென்றது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி அருண்குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் ரூ.425 கோடியில் புனரமைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது: சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

**சென்னை,அக்.17**

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா அவர்கள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தொகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீபிரகதாம்பாள் உடனுறை திருக்கோகர்ணேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா ?

அமைச்சர்- புதுக்கோட்டை மாவட்டம் அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயிலுக்கு ரூ. 46 லட்சம் செலவில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திருக்கோயில் குடமுழுக்கிற்கு 26.01.2026 அன்று நாள் குறிக்கப்பட்டிருக்கின்றது. அன்றைய தினத்தோடு இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 4,000 திருக்கோயில்களின் குடமுழுக்கு நிறைவு பெறும் என்பதை மாண்புமிகு பேரவை தலைவர் வாயிலாக உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா-, புதுக்கோட்டை அருள்மிகு பிரகதாம்பாள் உடனுறை திருக்கோகர்ணேஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிகளுக்கு ரூபாய் 46 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இத்திருக்கோயிலானது காசி விஸ்வநாதர் ஆலயத்தின் தீர்த்தத்திற்கு நிகரான புனிதத்தை கொண்டதும், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான சியாமாசாஸ்திரி அவர்கள் வந்து பாடிய ஆலயம் என்ற சிறப்பினையும் கொண்டது. புதுக்கோட்டை பெரிய கோயில் என்ற பெருமைக்குரிய பிரகதாம்பாள் கோயிலுக்கு போதிய உபயதாரர்கள் இல்லாத காரணத்தினால் குடமுழுக்கு நடத்த காலதாமதம் ஆகிறது. ஆகவே அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து விரைந்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா என்பதை தாங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களை கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் -உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த திருக்கோயிலின் திருப்பணியானது திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் நிதியைக் கொண்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மாத இறுதிக்குள் அந்த பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்து விரைவுபடுத்தி எவ்வளவு விரைவாக குடமுழுக்கு நடத்தப்பட வேண்டுமோ அவ்வளவு விரைவாக குடமுழுக்கு நடத்தப்படுவதற்கு உண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை பேரவை தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா அவர்கள் : பேரவை தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாநகராட்சி கீழமூன்றாம் வீதி நகரமையப்பகுதியில் அருள்பாலித்து வரும் வரதராஜ பெருமாள் திருக்கோயில் திருப்பணிகள் தொடங்கி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. திருப்பணிகள் தொய்வின்றி விரைவாக நடைபெற அறநிலையத்துறை சார்பாக கூடுதல் நிதி ஒதுக்கிடவும், புதுக்கோட்டை மாநகராட்சி பல்லவன் குளம் அருகில் அமைந்துள்ள வேதநாயகம் உடனுறை சாந்தநாத சுவாமி திருக்கோயில் பருவ மழை காலத்தில் குளம் நிரம்பி கோயிலுக்குள் மழை நீர் சென்று விடுகிறது. பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆகவே அமைச்சர் அவர்கள் பல்லவன் குளத்தை தூர் வாரி மழைநீர் வடிகால்களை சரி செய்து மறுசீரமைப்பு செய்து தருமாறு மாண்புமிகு பேரவை தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.



அமைச்சர் -உறுப்பினர் அவர்கள் கோரிய அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் ஒரு கோடி 46 லட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த தெப்பக்குளமானது மாசிமகத்திற்கு மாத்திரம் இந்து சமய அறநிலையத் துறை எடுத்துக் கொள்கிறது. மற்ற நேரங்களில் அந்த குளத்தைப் பொறுத்தளவில் மாநகராட்சி தான் பராமரிக்கின்றது. குளத்திற்கு தண்ணீர் வருகின்ற பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் நிறைந்திருக்கின்றன. ஆகவே மாநகராட்சியும் மாவட்ட நிர்வாகமும் இந்து சமய அறநிலைத்துறையும் ஒருங்கிணைந்து இந்த தீபாவளிக்கு பிறகு ஆய்வுக் கூட்டத்தை நடத்தி நிரந்தர தீர்வு காணப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த மாசிமகம் தெப்பம் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் இந்து சமய அறநிலைத் துறை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.சட்டமன்ற உறுப்பினர். பி.ஐயப்பன் -உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், விக்ரமங்கலம், வி.கோவில்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஆயிரம் ஆண்டுகள் பழமையான மருதப்ப சுவாமி திருக்கோயில் உள்ளது. அந்த திருக்கோயிலுக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் குடமுழுக்கு தேதி அறிவிக்கப்பட்டது ஆனால் திருப்பணி வேலைகள் இன்றைய தேதி வரை முடியவில்லை. குடமுழுக்கு எப்போது நடைபெறும் என்பதை பேரவை தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்

அமைச்சர் -உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திருக்கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயிலாகும். அந்தக் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேலாகிறது. திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்திட 425 கோடி ரூபாய் அரசு நிதி பெற்று, திருப்பணிகளுக்கு எடுத்துக் கொண்ட காரணத்தினால் தான் அந்த திருக்கோயிலில் திருப்பணிகளை தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிச்சயமாக அத்திருப்பணிகள் அனைத்தும் கருங்கல்லினால் நடைபெறுகின்ற பணி என்பதால் சற்று காலதாமதம் ஏற்பட்டு இருக்கின்றது. வருகின்ற தை மாதத்திலேயே அந்த திருப்பணிகள் முடிவுற்று குடமுழுக்கு நடத்துவதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைளும் விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதை பேரவை தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்.எ.நல்லதம்பி : பேரவை தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, திராவிட மாடல் ஆட்சியில் பல ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் திருப்பணிகள் குடமுழுக்குகள் செய்த அரசு, எனது திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் அருள்மிகு பசலிகுட்டை முருகன் திருக்கோயில் பழமையான கோயில். அந்த திருக்கோயிலினை திருப்பணி செய்ய அமைச்சர் அவர்கள் கடந்த கூட்டத்தொடரில் அறிவித்தார்கள். எனவே அரசு நிதியும், உபயதாரர்கள் நிதியையும் பெற்று உடனடியாக திருப்பணி செய்ய முன் வருவாரா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் : பேரவை தலைவர் அவர்களே, தமிழ் கடவுள் முருக பெருமானின் பெருமைக்கு பெருமை சேர்க்கின்ற ஆட்சி இந்த ஆட்சி என்றால் அதற்கு மாறுபட்ட கருத்து எந்த நிலையில் இருந்தும் வர எழுவதற்கு உண்டான சூழல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருக்கோயிலைப் பொறுத்தளவில் 11 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினரும், மற்றவர்களும் இணைந்து ஏழு கோடி ரூபாய் அளவிற்கு உபயதாரர்கள் நிதி வழங்குவதற்கு ஒப்புதல் கடிதம் அளித்திருக்கின்றார்கள். தேவைப்படும் இதர நிதியினை ஆணையர் பொதுநல நிதியிலிருந்து வழங்கிட பரிந்துரை வந்திருக்கின்றது. ஆகவே வெகுவிரைவாக அதற்கு ஒப்புதல் அளித்து, நேரடியாக களத்திற்கு சென்று ஆய்வு செய்து பணிகளை விரைவுப்படுத்தி திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்திதரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

# ஆதம்பாக்கம் பகுதியில் சூப் கடை உரிமையாளரிடம் கத்தி முனையில் பணம் பறித்த ரவுடி கைது

**சென்னை அக் 17-**

சென்னை, மடிப்பாக்கம், வாஞ்சி நாதன் தெருவில் வசித்து வரும் முருகன், என்பவர் ஆதம்பாக்கம் பகுதியில் சூப் கடை நடத்தி வருகிறார். இவர் நேற்று முன் தினம் காலை கடைக்கு தேவையான பொருட்களை வாங்குவதற்காக அவரது இருசக்கரவாகனத்தில் ஆதம்பாக்கம், கக்கன் நகர் மெயின் ரோட்டில் சென்று கொண்டிருந்த போது, அங்கு நின்று கொண்டிருந்த நபர் ஒருவர் மேற்படி முருகனை வழிமறித்து கத்தியைக் காட்டி மிரட்டி பணம் ரூ.1,200 பறித்து சென்றார். இது குறித்து முருகன் ஆதம்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஆதம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட பிரபாகரன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து பணம் ரூ.700 ஐ மற்றும் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் எதிரி பிரபாகரன் காவல் நிலைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே கொலைமுயற்சி, வழிப்பறி வழக்குகள் என 12 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி பிரபாகரன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கும் பசுமைப் பட்டாசுகளை வெடித்து தீபாவளியை கொண்டாடுங்கள்: கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பு வலியுறுத்தல்

**சென்னை அக்.17-**

சுற்றுச்சூழல் பாதிப்பைக் வெகுவாக குறைக்கும் பசுமைப் பட்டாசுகளை வெடித்து தீபாவளியை மகிழ்ச்சியாக கொண்டாடலாம் என

கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் கிரீன் நீடா மு.ராஜவேலு தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது,

பசுமைப் பட்டாசுகள் என்பவை பாரம்பரிய பட்டாசு, நாட்டு வெடிகள், சிவகாசி பட்டாசுகள் மற்றும் சீனா நாட்டு பட்டாசுகளைக்காட்டிலும் குறைவான மாசுபாட்டை ஏற்படுத்தும், சுற்றுச்சூழலுக்கு உகந்த பட்டாசுகளாகும். இவை தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் ம் மூலம் உருவாக்கப்பட்டவை, மேலும் இவை குறைந்த மாசுபடுத்துபொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. பாரம்பரிய பட்டாசுகளில் உள்ள பேரியம் நைட்ரேட் போன்ற சில வேதிப்பொருட்களுக்குப் பதிலாக வேறு மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதால், இவை காற்று மாசைக் குறைக்கின்றன. வழக்கமான பட்டாசுகளை விட பசுமைப் பட்டாசுகள் குறைந்த அளவு மாசுபடுத்தும் இரசாயனங்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. பசுமைப் பட்டாசுகள் வெடிக்கும்போது இதன் வெடிச்சத்தம் சிவகாசி பட்டாசுகளை விட குறைவாக இருக்கும், இதனால் ஒலி மாசுபாடும் குறைகிறது. இவை அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் கீழ் செயல்படும் நீரி அமைப்பால் உருவாக்கப்பட்டவை.

பாரம்பரிய நாட்டு பட்டாசுகளில் உள்ள பேரியம் நைட்ரேட் போன்ற மாசுகளை உருவாக்கும் கூறுகள் பிறந்து சில நாட்களே ஆன சிசுக்களுக்கும், குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும், மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வீட்டில் ஓய்வில் இருப்பவர்களுக்கும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும். ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி நாளில் பட்டாசுகளின் இராயனப்புகையால் காற்றின் தரம் சுவாசிக்க முடியாது நிலைக்கு சென்றுவிடுகிறது. கடந்த ஆண்டு டெல்லியில் மரங்களின் மீது தண்ணீரைச் பீய்ச்சி அடித்து நகரை தூய்மை செய்த நிகழ்வுகளும் நடந்தது.

# மாணவியருக்கு முதலுதவி விழிப்புணர்வு முகாம்

**சென்னை அக் 17-**

சென்னை பெருநகர போக்குவரத்து காவல் மற்றும் போக்குவரத்து வார்டன் அமைப்பு இணைந்து பள்ளி மாணவியருக்கு முதலுதவி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின்பேரில், போக்குவரத்து கூடுதல் காவல் ஆணையர் வழிகாட்டுதலின்பேரில், சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையும், தமிழ்நாடு காவல் துறை போக்குவரத்து வார்டன் அமைப்பும் இணைந்து, சென்னை, புரசைவாக்கத்தில் உள்ள சி.எஸ்.ஐ. ஈவார்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் சாலை பாதுகாப்பு ரோந்துடன் ஒருங்கிணைந்து முதலுதவி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.பள்ளி மாணவர்களுக்கு அடிப்படை முதலுதவி அறிவு மற்றும் சாலை பாதுகாப்பு நடைமுறைகளின் முக்கியத்துவம் குறித்து கற்பிப்பதே இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும். இந்த நிகழ்வில், பயிற்சி பெற்ற நிபுணர்களால் நேரடி செயல் விளக்கங்கள் வழங்கப்பட்டன, சாலை விபத்துகள் அல்லது அவசர நிலைகளில் விரைவான செயல்பாடு மற்றும் உயிர்காக்கும் நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டன. சுமார் 1,500 மாணவ, மாணவியர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறை கூடுதல் காவல் ஆணையர் ஜி.கார்த்திக்கேயன் போக்குவரத்து காவல் இணை ஆணையர் (வடக்கு), தலைமை போக்குவரத்து வார்டன் மற்றும் சி.எஸ்.ஐ. ஈவார்ட் பள்ளி முதல்வர் ஆகியோருடன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# பழவந்தாங்கல் பகுதியில் போதைப்பொருள் விற்ற வாலிபர் கைது

**சென்னை அக் 17-**

சென்னை பழவந்தாங்கல் காவல் நிலைய ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் பழவந்தாங்கல், ரகுபதி நகர், கல்குட்டை அருகில் கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த நபரை விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர் ஸ்டாம்ப் என்ற போதைப்பொருளை மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது. அதன்பேரில், பழவந்தாங்கல் காவல் நிலைய காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, போதைப்பொருள் வைத்திருந்த புவனேஷ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து ஸ்டாம்ப்புகள் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி புவனேஷ் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# உடல் வலி நிவாரண மாத்திரைகள் விற்பனை: வாலிபர் கைது

**சென்னை அக் 17-**

சென்னை கொடுங்கையூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர், கொடுங்கையூர், கணேஷ் நகர் பூங்காவில் கண்காணித்து, அங்கு சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த இளைஞரை விசாரணை செய்து, அவர் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் கவரை சோதனை செய்தபோது, அதில் உடல்வலி நிவாரண மாத்திரைகள் விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது. அதன்பேரில், கொடுங்கையூர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்டவிரோதமாக உடல்வலி நிவாரண மாத்திரைகள் வைத்திருந்த எதிரி பரத் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 30 எண்ணிக்கைகள் கொண்ட என்ற மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி பரத் மும்பையில் இருந்து மேற்படி உடல்வலி நிவாரண மாத்திரைகளை வாங்கி வந்து சென்னையில் விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி பரத் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# கிண்டி சிட்கோ பகுதியில் மெத்தபெட்டமைன் விற்ற 2 பேர் கைது

**சென்னை அக் 17-**

கிண்டி சிட்கோ பகுதியில் மெத்தபெட்டமைன் போதை பொருள் வைத்திருந்த 2 பேரை நேற்று போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 4 கிராம் போதைபொருள் பறிமுதல் செய்யப்பட்டது.கிண்டி, சிட்கோ எஸ்டேட் வளாகப் பகுதியில் போதை பொருள் நடமாட்டம் இருப்பதாக நேற்று கிண்டி போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து, அப்பகுதியில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். அப்போது சிட்கோ எஸ்டேட் பகுதியில் சந்தேக நிலையில் சுற்றி திரிந்த 2 பேரை மடக்கி பிடித்து விசாரித்தனர். அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பேசியதால், அவர்களின் கைப்பையை சோதனை செய்தனர்.இதில், அவர்கள் மெத்தமெட்டமைன் போதை பொருள் வைத்திருப்பது தெரியவந்தது. விசாரணையில், அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த பிரசாத் (30), சூர்யா (23) எனத் தெரியவந்தது. இவர்கள் வெளிமாநிலங்களில் இருந்து மெத்தபெட்டமைன் போதை பொருள் கடத்தி வந்து, கிண்டி சுற்றுவட்டாரப் பகுதிகளில் சில்லறை விற்பனையில் ஈடுபட்டு வந்திருப்பதும் தெரியவந்தது. கிண்டி போலீசார், 2 பேரையும் கைது செய்தனர். அவர்களிடம் 4 கிராம் மெத்தபெட்டமைன் போதைபொருள் பறிமுதல் செய்யப்பட்டது. பின்னர் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# வேலூர் காட்பாடி பகுதியில் சாலை மற்றும் பாதாள சாக்கடை திட்ட பணிகள்: கலெக்டர் வே.இரா.சுப்புலெட்சுமி நேரில் ஆய்வு



**வேலூர் அக் 17-**

வேலூர் கலெக்டர் வே. இரா.சுப்புலெட்சுமி, இன்று (16.10.2025) வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1க்குட்பட்ட 6, 9, 10,11,12,13 ஆகிய வார்டுகளில் நடைபெற்று வரும் சாலை மற்றும் பாதாள சாக்கடை திட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். வேலூர் மாநகராட்சி, மண்டலம் 1, வார்டு 12 க்குட்பட்ட அருப்புமேடு பிரதான சாலையில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 684 மீட்டர் நீளத்திற்கு தார்சாலை அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இச்சாலையில் பாதாள சாக்கடை திட்டத்திற்கான பிரதான குழாய் பதிக்கும் பணிகள் முடிவுற்று வீடுகளுக்கு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து மண்டலம் 1, வார்டு 6, திருவள்ளுவர் நகர் பகுதியில் 410 மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.இச்சாலை பணிகளை வருகின்ற 30.10.2025க்குள் முடிக்க உத்தரவிட்டார். அதனை தொடர்ந்து மண்டலம் 1, வார்டு 11க்குட்பட்ட 2 வது மேற்கு குறுக்கு தெரு, 3வது மேற்கு குறுக்கு தெரு, 4வது மேற்கு குறுக்கு தெரு, 5 வது மேற்கு குறுக்கு தெரு மற்றும் 3 வது மேற்கு பிரதான சாலை ஆகியவற்றில் 1.18 கி.மீ நீளத்திற்கு தார் சாலை அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மண்டலம் 1, வார்டு 13க்குட்பட்ட கழிஞ்சூர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நகர் பகுதியில் 126 மீட்டர் நீளத்திற்கு தார் சாலை அமைப்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார். இச்சாலையில் நடைபெற்று வரும் வீடுகளுக்கு பாதாள சாக்கடை கழிவுநீர் இணைப்பு வழங்கும் பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார். தொடர்ந்து மண்டலம் 1, வார்டு 9க்குட்பட்ட காங்கேயநல்லூர் 9 வது மற்றும் 18 வது கிழக்கு பிரதான சாலைகளில் 370 மீட்டர் நீளத்திற்கும், வார்டு 10க்குட்பட்ட மடம் தெருவில் 466 மீட்டர் நீளத்திற்கும் தார்சாலை அமைக்கும் பணிகள் குறித்து ஆய்வு செய்தார். இச்சாலைகளில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை பணிகளை 17.10.2025க்குள் முடித்து சாலை அமைப்பதற்காக தடையின்மை சான்று வழங்க அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார், மாநகராட்சி ஆணையாளர் இரா.லெட்சுமணன், கண்காணிப்பு பொறியாளர் அரசு, மாமன்ற உறுப்பினர்கள் டிடா. சரவணன், சரண்யா, ரமேஷ் உட்பட பலர் உடனிருந்தனர்.

# தி.மலையில் நயினார் நாகேந்திரன் பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள்:மாவட்ட தலைவர் கே.ரமேஷ் வழங்கினார்



**திருவண்ணாமலை, அக்.17-**

திரு வ ண் ணா மலை தெற்கு மாவட்ட அலுவலகத்தில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி ஏழை எளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மாவட்ட தலைவர் கே.ரமேஷ் வழங்கினார்.

திருவண்ணாமலை அவலூர்பேட்டை சாலையிலுள்ள பாஜக தெற்கு மாவட்ட அலுவலகத்தில் பாஜக சார்பில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பிறந்த நாள் விழா தெற்கு மாவட்ட தலைவர் கே.ரமேஷ் தலைமையில் கொண்டாடப்பட்டது. இதையொட்டி பாஜக அலுவலகம் எதிரிலுள்ள ஸ்ரீவள்ளி ஸ்ரீதெய்வாணை சமேத ஸ்ரீசுப்பிரமணியர் கோவிலில் பாஜக மாநில தலைவர் நைனார் நாகேந்திரன் நீடூழி வாழ வேண்டி சிறப்பு வழிபாடு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மகாதீபாராதனை நடந்தது. தொடர்ந்து பாஜக அலுவலகம் முன்பு ஏழை எளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. இதில் கலந்துகொண்டு தெற்கு மாவட்ட தலைவர் கே.ரமேஷ் ஏழை எளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் பொதுமக்களுக்கு அன்னதானமும் வழங்கினார்.

இந்த விழாவில் மாவட்ட பொதுச் செயலாளர்கள் எஸ்.கவிதா பிரதீஷ் டி.ஜெய்நாத் மாவட்ட துணை தலைவர்கள் பி.கிருஷ்ணமூர்த்தி தீபாசங்கர் ஜி.கலாவதி மாவட்ட செயலாளர் எம்.வள்ளி தெய்வாணை மாவட்ட பொருளாளர் எஸ்.பி.கே.சுப்பிரமணியன் மாநில செயற்குழு உறுப்பினர் வி.கருணாகரன் தொழில்பிரிவு மாவட்ட தலைவர் கே.எஸ்.அண்ணாமலை அமைப்பு சாரா பிரிவு மாவட்ட செயலாளர் சரவணன் முன்னாள் மாவட்ட செயலாளர் பிச்சாண்டி தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட செயலாளர் மணிவர்மா சுற்றுச்சூழல் பிரிவு மாவட்ட தலைவர் எம்.சுரேஷ் மாவட்ட மருத்துவ பிரிவு தலைவர் டாக்டர் அரிகோவிந்தன் முன்னாள் மாவட்ட பொதுச் செயலாளர் எம். முருகன் மாநகர செயலாளர் எம்.ராஜா துரிஞ்சாபுரம் ஒன்றிய பொதுச் செயலாளர் ஆர். ராஜ்குமார் முன்னாள் மாநில பொதுக்குழு உறுப்பினர் ஆறுமுகம் மற்றும் நிர்வாகிகள் எஸ்.ஆர்.செல்வம் ஜி.முருகன் ஆர்.பழனி ராஜகோபால் போலீஸ் ரவி உள்பட மாநில பிரிவு பொறுப்பாளர்கள் மாவட்ட அணிகள் மற்றும் பிரிவு தலைவர்கள் மண்டல தலைவர்கள் முன்னாள் மண்டல தலைவர்கள் மாநகர பொருப்பாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாநகர துணை தலைவர் ஏ.இளங்கோ நன்றி கூறினார்.

# ஆற்காடு நகர மன்ற அவசரக் கூட்டம்



ராணிப்பேட்டை அக். 17-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகராட்சியில் அவசர கூட்டம் கூட்ட அரங்கில் நடைபெற்றது .கூட்டத்திற்கு நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் டாக்டர். பவளக்கொடி சரவணன் ஆணையாளர் சுரேஷ்பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நகர மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசியதாவது நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான கால்வாய் அமைக்க 19 . 5 கோடி நிதி வழங்கிய நீர் வளத்துறை அமைச்சர் துரை முருகன் மற்றும் ஆற்காடு ஜே .எல். ஈஸ்வரப்பன் எம். எல்.ஏ. ஆகியோருக்கு நகர மன்ற கூட்டத்தின் சார்பாக நன்றியை தெரிவித்தார் கண்ணன் வார்டு வரைபடத்தில் தெருக்கள் மாறியுள்ளது அதனை சரி செய்யவும் மேலும் விடுபட்ட தெருகளையும் சேர்க்கவும் பொன். ராஜசேகர் தனியார் துப்புரவு பணியாளர்கள் எவ்வளவு பேர் வேலை செய்கின்றனர் என கணக்கெடுக்க வேண்டும் மேலும் அவர்களுக்கு சரியான முறையில் கூலி வழங்கப்படுகிறதா என கண்காணிக்க வேண்டும் குணாளன் எனது வார்டில் தண்ணீர் டேங்க் கட்ட பள்ளம் எடுத்துள்ளனர் .அதனைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டு கேட் போடப்பட்டுள்ளது. ஆனால் அந்த கேட்டை பூட்டுவதில்லை திறந்தே காணப்படுகிறது .நேற்று முன் தினம் பெய்த மழையினால் மாடு ஒன்று பள்ளத்தில் விழுந்து விட்டது இதில் மனிதர்கள் விழுந்து விட்டால் என்ன ஆகும் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு விவாதம் நடைபெற்றது கூட்டத்தில் நகர மன்ற உறுப்பினர்கள் நகராட்சி பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சச்சிதானந்தா சாய்பாபா ஆலயத்தில் சிறப்பு வழிபாடு: ஆயிரம் பேருக்கு அன்னதானம்



**அரக்கோணம் அக் 17-**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் வட்டம் வடமாம்பாக்கம் ஊராட்சி எல்லையில் . ஸ்ரீ சச்சிதானந்தா சாய் பாபா 'ஆலயம் அமைந்து உள்ளது இங்கு சிறப்பு வழிபாடு ஆலய ஒருங்கிணைப்பாளர் சசிகுமார் தலைமையில் நடைபெற்றது அதனைத் தொடர்ந்து ஆயிரம் பேருக்கு வட பாயசத்துடன் அன்னதானம் வழங்கப்பட்டது இதனை அரக்கோணம் முன்னாள் நகர சபை மன்ற துணைத் தலைவர் கே வி ரவிச்சந்திரன் சித்ரா தணிகைமணி ஜெயஸ்ரீ குடும்பத்தார் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.மேலும் வழிபாட்டில் முக்கிய பிரமுகர்கள் ஆறுமுகம், நரசிம்மன், தரணி, பாலகிருஷ்ணன் உட்பட உறவினர்கள் நண்பர்கள் பலரும் திரளாக கலந்து கொண்டனர்.

# உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் குறித்து புத்தாக்கப் பயிற்சி

## கலெக்டர் க.சிவசௌந்திரவல்லி தலைமையில் நடைபெற்றது



**திருப்பத்தூர் அக் 17-**

திருப்பத்தூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் இளம் நுகர்வோர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்- 2019 குறித்து புத்தாக்கப் பயிற்சியினை(2025 - 2026) .க.சிவசௌந்திரவல்லி இன்று (16.10.2025) துவக்கி வைத்து நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019 - ன் சிறப்பம்சங்களை உள்ளடக்கிய விழிப்புணர்வு பயிற்சி கையேட்டினை வெளியிட்டு மாணாக்கர்களுக்கு வழங்கினார். முன்னதாக இளம் தலைமுறையினருக்கு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 குறித்து விழிப்பணர்வு ஏற்படுத்தும் வகையில் வழக்கறிஞர் அவர்களால் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் -2019 குறித்தும் உணவு பாதுகாப்புத்துறை நியமன அலுவலர் அவர்களால் ரூநரழவ் உணவு கலப்படம்ரூநரழவ் குறித்தும் தீயணைப்பு துறை அலுவலர்களால் ஏரிவாயு உருளை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. .க.சிவசௌந்திரவல்லி தெரிவித்ததாவது:- 2025-2026 ஆம் ஆண்டிற்கான உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதகாப்புத்துறையின் வரவு - செலவு திட்ட மானிய கோரிக்கையின் போது தமிழகம் முழுவதும் இளம் நுகர்வோரிடையே ரூநரழவ்நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் -2019ரூநரழவ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு நாள் புத்தாக்க பயிற்சி வழங்கப்படும் என மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டதை தொடர்ந்து இன்று புத்தாக்கப் பயிற்சி நடைபெற்று வருகிறது. நுகர்வோர் ஒவ்வொருவரும் நுகர்வியல் கல்வி குறித்த விழிப்புணர்வினை பெற்று வாழ்தல் அவசியமாகிறது. அதனடிப்படையில் தற்போது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019-ல் அனைத்து விதமான பாதுகாப்பு அம்சங்களையும் வழங்கியுள்ளது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் -2019 இல் பல்வேறு சிறப்பு அம்சங்கள் இடம் பெற்று உள்ளது. பாதிக்கப்பட்ட நுகர்வோர் தங்கள் வழக்குகளை வழக்கறிஞர் இல்லாமல் தாங்களே வாதாடலாம் (35-ன) பிரிவுப்படி பாதிக்கப்பட்ட நுகர்வோர் புகார்களை 2 ஆண்டுகளுக்குள் தபால்ஃமின்னணு மூலம் தெரிவிக்கலாம். இச்சட்டதின் கீழ் பெறப்படும் புகார்கள் 21 நாட்களுக்குள் வாய்தா அதிகம் இல்லாமல் தீர்வு செய்யப்படும். நுகர்வோர் வழக்கு செலவுகளை திரும்ப பெற்றுக்கொள்ளலாம். நுகர்வோருக்கு ஏற்படும் மன உளைச்சலுக்கு இச்சட்டதின் கீழ் நிவாரணம் வழங்கப்படும். இச்சட்டதின் கீழ் பாதிக்கப்பட்ட நுகர்வோர் மாவட்ட அளவில் 50 இலட்சம் வரையும் மாநில அளவில் 50 இலட்சம் முதல் 2 கோடி வரையும் தேசிய அளவில் 2 கோடிக்கும் மேல் நஷ்ட்டாக பெறலாம். நுகர்வோர் நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பினை விற்பனையாளர்சேவை வழங்குபவர் நிறைவேற்ற தவறினால் அபராதமாக 2 000 -10 000 வரையும் சிறை தண்டனை 1 மாதம் முதல் 3 ஆண்டுகள் வரை வழங்கப்படும். இது போன்ற பயிற்சிகள் இளம் தலைமுறையினராகிய தங்களுக்கு பயன் உள்ளதாக அமையும் என .க.சிவசௌந்திரவல்லி தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் முருகேசன் முதன்மை கல்வி அலுவலர் புண்ணியகோட்டி உணவு பாதுகாப்பு மாவட்ட நியமன அலுவலர் (பொ) .ஹேமா மாவட்ட தீயணைப்பு அலுவலர் .ஜாஸ்மின் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு குழு சங்க உறுப்பினர் விஜயராஜ் வட்ட வழங்கள் அலுவலர் கௌரிசங்கர் வழக்கறிஞர் வெங்கடேசன் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர்.

# வேலூர் நறுவீ மருத்துவமனையில் பெண் நோயாளிக்கு ரோபோ மூலம் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனை



**வேலூர் அக் 17-**

வேலூர் நறுவீ மருத்துவமனையில் மூட்டு நோயால் பாதிக்கப்பட்ட மேற்கு வங்களாத்தை சேர்ந்த 54 வயது பெண் நோயாளிக்கு வேலூர் நறுவீ மருத்துவமனையில் ரோபோ மூலம் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து நாட்டில் தயாரிக்கப்பட்ட அதிநவீன ரோபோ கொண்டு இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வேலூர் நறுவீ மருத்துவமனை தலைவர் முனைவர் ஜி.வி. சம்பத் கூறியதாவது: வேலூரில் இயங்கி வரும் நறுவீ மருத்துவமனை பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிகிச்சையில் குணமடைந்த நோயாளிகளை தொடர்ந்து கண்காணிக்கும் பணியும் இம்மருத்துவமனையின் மூலம் நடைப்பெற்று வருகிறது. இம்மருத்துவமனை தொடங்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகிறது. இந்த கால கட்டத்தில் இம்மருத்துவமனையில் வெளிநாடு மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இம்மருத்துவமனைக்கு வந்த நோயாளிகளுக்கு இருதய சிகிச்சை, நுரையீரல், மகப்பேறு மருத்துவம், சர்க்கரை நோய், இரத்த கொதிப்பு. குடல் நோய் சிகிச்சை, மூட்டு வலி மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, நரம்பியல் சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு விதமான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்துள்ளனர்.

இம்மருத்துவமனையில் இருதயம், நுரையீரல், கல்லீரல் மற்றும் சிறுநீரகம் ஆகிய உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் தற்போது சிறுநீரகம் மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டு உள்ளது.

தற்போது மற்றொரு நிகழ்வாக மூட்டு வலியால் பாதிக்கப்பட்ட மேற்கு வங்க மாநிலத்தை சேர்ந்த 54 வயதுடைய பசுதா சத்பதி என்ற பெண் நோயாளி பல்வேறு நோய் சம்மந்தமாக பல்வேறு மருத்துவமனைகளுக்கு சென்று பலனில்லாமல் வேலூர் நறுவீ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதனை செய்ததில் அவரது கால் முட்டி முற்றிலும் பாதிக்கப்பட்டு நடக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. எனவே அவருக்கு முழு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை ரோபோ மூலமாக அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்யப்பட்டது.


இதனை தொடர்ந்து மூட்டு மாற்று அறுவை சிகிச்சை குழுவினர் இங்கிலாந்து நாட்டின் ஸ்மித் & நெஃப்யு நிறுவனத்தின் தயாரிப்பான பிரத்யேக ரோபோ மூலம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. வழக்கமாக ஒரு நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்யும் போது அதிக இரத்த போக்கு, திசு பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை கையாள வேண்டியிருக்கும்.

ஆனால் ரோபோ கொண்டு அறுவை சிகிச்சை செய்வதின் மூலம் அதிக இரத்த போக்கு மற்றும் திசு பாதிப்பு தடுக்கப்படும். முக்கியமாக எந்த இடத்தில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்பதை ரோபோ துல்லியமாக கணித்து தருவதின் மூலம் குறைந்த நேரத்தில் அறுவை சிகிச்சை செய்ய முடியும். அறுவை சிகிச்சை முடிந்து அந்த பெண் நோயாளி இரண்டாவது நாளிலேயே நடக்க தொடங்கி விட்டார். மூன்றாவது நாளில் மாடிப்படி ஏறி இறங்க தொடங்கினார். இது ஒரு புரட்சிகரமான அறுவை சிகிச்சை. இதே போன்று முழு இடுப்பு மாற்று அறுவை சிகிச்சையும் செய்ய முடியும்.

தீ விபத்தால் பாதிப்பு ஏற்படுவதை தடுக்கும் வகையில் அதற்கான பாதுகாப்பு வழிமுறைகள் பற்ற பற்றிய பயிற்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம் ஒன்றை அண்மையில் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ள தீ பாதுகாப்பு ஆணையம் அறிவித்துள்ளது. இது சம்மந்தமாக பள்ளி மற்றும் கல்லூரிகளின் தேசிய மாணவர் படையினருக்கு தீ தடுப்பு மற்றும் தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி பயிற்சி அளிக்கப்படவுள்ளது. தமிழ்நாட்டில் முதற்கட்டமாக இதற்கான பயிற்சிகள் வேலூர் நறுவீ மருத்துவமனையில் விரைவில் நடைபெற உள்ளது. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையினர் இதற்கான பயிற்சிகளை வழங்க உள்ளனர் என்றும் கூறினார்.

இந்த நிகழ்வில் மருத்துவமனை செயல் இயக்குநர் டாக்டர் பால் ஹென்றி, மருத்துவ சேவைகள் தலைவர் டாக்டர் அரவிந்தன் நாயர், எலும்பியல் துறை தலைமை மருத்துவர் டாக்டர் வெர்னன் லீ, தலைமை இயக்குதல் அலுவலர் சரவணன் இராமன், பொது மேலாளர் நிதின் சம்பத் ஆகியோர் உடன் இருந்தனர


# புதுப்பாளையம் வட்டார அளவிலான கலைத் திருவிழா



**செங்கம் அக்டோபர்17-**

அரசு பள்ளிகளில் கலைத் திருவிழா போட்டிகள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க நடுநிலை உயர்நிலை மேல்நிலை பள்ளி மாணவர்களுக்கு பசுமையும் பாரம்பரியமும் என்ற மையக்கருத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு கடந்த 14ம் தேதி தொடங்கி மூன்று நாட்கள் நடத்தப்பட்டது. அதன்படி செங்கம் தாலுகா புதுப்பாளையம் ஒன்றியம் அனைவருக்கும் கல்வி வட்டார வளமையும் சார்பில் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியை வட்டார வளமைய மேற்பார்வையாளர் சின்னராஜ் ஏற்பாடு செய்து தலைமை தாங்கி நடத்தினார். அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் காந்திமதி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். பல்வேறு போட்டிகளில் 1253 மாணவ மாணவிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கு ஆசிரியர் பயிற்றுநர்கள் சம்பத் இந்துமதி முன்னிலை வகித்தனர். முடிவில் ஆசிரியர் பயிற்றுனர் ஜம்புகுமார் நன்றி கூறினார். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மாவட்ட அளவில் பங்கேற்பார். நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் சிறப்பு ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# ரூ 53 லட்சத்தில் சித்தேரி கீழ் கண்டிகை பகுதியில் தார்சாலை பணிக்கு அடிக்கல்



அரக்கோணம் அக் 17-

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தேரி , கீழ் கண்டிகை மற்றும் அண்ணா நகர் செல்லும் சாலை, கடந்த 23 ஆண்டாக சீரமைக்கபடாமல் குண்டும் குழியுமாக இருந்தது இதனை தொடர்ந்து நெமிலி சேர்மன் வடிவேலு , கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தியிடம் தகவல் தெரிவித்தார் அதன் பயனாக 1.5 கிலோ மீட்டருக்கு தார் சாலை அமைக்க ரூ.53 இலட்சம மதிப்பீடு தயாரிக்கபட்டு பணிகள் நேற்று துவங்கியது இதில், சித்தேரி ஊராட்சி மன்ற தலைவர் கலைஞ்செழியன், ஒன்றிய குழு உறுப்பினர் சுப்பிரமணி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் தனசேகர் அவைத்தலைவர் புருஷோத்தமன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சின்னப்பா, சித்தேரி வார்டு உறுப்பினர்கள் ஆஷா பாஸ்கர், ஷீலா ரமேஷ், சிவகாமி ஜெகதீசன், விஜி, அருள், ரஞ்சித் குமார் மற்றும் குப்புசாமி, ஜெயபால், கபாலி, ஜெகதீசன், டில்லி, அண்ணாமலை, மணி, குருநாதன், வெங்கடேசன், ராஜா, பரத்ராஜ், தணிகாசலம், ஜெகதா, கோமதி, மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# செங்கத்தில் நூலக வாசகர் வட்ட கூட்டம்



**செங்கம் அக் 17-**

செங்கம் முழு நேர கிளை நூலகத்தில் வாசகர் வட்ட கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு துணைத் தலைவர் மணிமாறன் தலைமை தாங்கினார்.

நூலகர் நேதாஜி வரவேற்றுப் பேசினார். நூலக ஆலோசகர் மாணிக்கம் கௌரவத் தலைவர் முருகமணி ஆன்மீக சொற்பொழிவாளர் தனஞ்செயன் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் வெங்கடேசன் முன்னிலை வகித்தனர். விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக இளம் வழக்கறிஞர்கள் விக்னேஷ் கணேஷ் தமிழரசி அழைக்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டனர். முடிவில் நூலகர் தமிழ்ச்செல்வி நன்றி கூறினார்.

கூட்டத்தில் ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்க தலைவர் காமத் முத்தமிழ் இலக்கிய மன்ற தலைவர் ராமராகவன் காரப்பட்டு அரசு பள்ளி துணைத் தலைமை ஆசிரியர் தமிழ்மதி என்கிற மணிவண்ணன் ரிஷபேஸ்வரர்

அகாடமி தலைவர் கவியரசன் ஆவண எழுத்தர் வழக்கறிஞர் கொட்டகுளம் முனுசாமி ஆசிரியர் சரவணன்உட்பட பலர் கலந்து கொண்டனர்

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997 E-Mail: velloredi@thinaboomi.com RNI. Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# தி..மலையில்அனைத்து வார்டுகளிலும் வளர்ச்சி பணிகள்: மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம்

**திருவண்ணாமலை, அக்.17-**

திருவண்ணாமலை மாநகராட்சி மன்ற கூட்டரங்கில் சாதாரண கூட்டம் மேயர் நிர்மலாவேல்மாறன் தலைமையில் நடந்தது. ஆணையாளர் எஸ்.செல்வபாலாஜி முன்னிலை வகிக்க துணை மேயர் சு.ராஜாங்கம் அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் கலந்துகொண்ட மாமன்ற உறுப்பினர்கள் பேசுகையில் சாலையோரம் கொட்டப்படும் குப்பைகளை முறையாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் அனைத்து பகுதிகளிலும் தெருவிளக்குகள் முறையாக எரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் கொசு மருந்து அனைத்து வார்டுகளிலும் டெங்கு நோய் தடுக்க பரவாமல் இருக்க கொசு மருந்து அடிக்க வேண்டும் 2ம் கட்டமாக நடைபெறும் பாதாள சாக்கடை திட்ட பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். தொடர்ந்து கூட்டத்தில் திருவண்ணாமலை மாநகராட்சி பகுதியில் குடிநீர் வசதி சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்வது தொடர்பாகவும் மழைநீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்வது தொடர்பாகவும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பன உள்ளிட்ட 55 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அலுவலர்கள்கலந்துகொண்டனர்.

### செப்டம்பர் மாதத்திற்கான

# ஐ.சி.சி. விருது அபிஷேக், மந்தனாவுக்கு அறிவிப்பு



**துபாய், அக். 17-**

செப்டம்பர் மாதத்திற்கான ஐ.சி.சி. விருதை இந்தியாவின் அபிஷேக், மந்தனா வென்றுள்ளனர்.

**அதிரடி ஆட்டக்காரர்...**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் மாதந்தோறும் சிறந்த வீரரை தேர்வு செய்து கவுரவிக்கிறது. அந்த வகையில் செப்டம்பர் மாதத்திற்கான சிறந்த வீரராக இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் அபிஷேக் சர்மா தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவர் ஆசிய கோப்பையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியன் மூலம் இந்த விருதை தட்டி சென்றுள்ளார். ஆசிய கோப்பை தொடரில் 7 போட்டிகளில் விளையாடி 3 அரைசதங்களுடன் 314 ரன்கள் குவித்தார். இந்த தொடரில் அதிக ரன்கள் குவித்த வீரர் என்ற வகையில் தொடர் நாயகன் விருதை இவர் தட்டி சென்றார்.

**ஸ்மிருதி மந்தனா தேர்வு...**

மகளிருக்கான செப்டம்பர் மாதத்திற்கான சிறந்த வீராங்கனையாக இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் தொடர் நாயகி விருதை மந்தனா வென்றார். 3 போட்டிகளில் விளையாடிய மந்தனா 1 சதத்துடன் 308 ரன்கள் குவித்தார்.

### ஆஸ்திரேலிய கிரிக்கெட் தொடர்:

# பயிற்சியை தொடங்கிய ரோகித், கோலி

**மெல்போர்ன், அக். 17-**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் பங்கேற்கவுள்ள இந்திய முன்னணி வீரர்கள் ரோகித் - விராட் கோலி அங்கு பயிற்சியை தொடங்கினர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

**சுற்றுப்பயணம்...**


இந்திய கிரிக்கெட் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதலில் தொடங்கும் ஒருநாள் தொடரில் விளையாடுவதற்காக நேற்று முன்தினம் டெல்லியில் இருந்து 2 கட்டமாக இந்திய வீரர்கள் சென்றனர்.

**வலைதளங்களில்...**

இந்நிலையில் நேற்று இந்திய வீரர்கள் ஆஸ்திரேலியாவுக்கு சென்றடைந்தனர். அங்கு ஹோட்டலில் சிறிது நேரம் ஓய்வு எடுத்தனர். இதனையடுத்து பெர்த் மைதானத்தில் இந்திய வீரர்கள் வலை பயிற்சியில் ஈடுப்பட்டனர். குறிப்பாக விராட் கோலி, ரோகித் சர்மா பேட்டிங் செய்தனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

### தொடர்ந்து 2 ஆண்டுகளாக இறங்குமுகம்:

# ஐ.பி.எல். மதிப்பு ரூ.76,100 கோடியாக சரிவு



**மும்பை, அக். 17-**

ஐ.பி.எல். மதிப்பு தொடர்ந்து 2 ஆண்டுகளாக சரிவை கண்டுள்ளது. அதன் மதிப்பு ரூ.76,100 கோடியாக தற்போது குறைந்துள்ளது.


**உச்சத்துக்கு சென்ற...**

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி 2008-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இந்த போட்டி வர்த்தக ரீதியில் மிகப் பெரிய வெற்றியை பெற்றது. உலகில் அதிக அளவில் வருவாயை ஈட்டி தரும் போட்டிகளில் ஒன்றாக ஐ.பி.எல். இருக்கிறது. இதனால் அதன் மதிப்பு உச்சத்துக்கு சென்றது. இந்த நிலையில் வரலாற்றில் முதல் முறையாக ஐ.பி.எல்.லின் மதிப்பு தொடர்ந்து 2 ஆண்டுகளாக சரிவை சந்தித்து உள்ளது.

**நிலையானதாக...**

2023-ல் ரூ.92,500 கோடியில் இருந்த ஐ.பி.எல். மதிப்பு 2024-ல் ரூ.82,700 கோடியாகவும், இந்த ஆண்டில் ரூ.76,100 கோடியாகவும் சரிந்து உள்ளது. 2025-ம் ஆண்டில் ஒட்டு மொத்த மதிப்பு 8 சதவீதம் குறைந்து உள்ளது. அதே நேரத்தில் அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். போட்டியின் மதிப்பு பெரும்பாலும் மாறாமல் நிலையானதாக இருக்கும் என்று ஆய்வு குழு தெரிவித்து உள்ளது. ஒளிபரப்பு உரிமம், விளம்பரதாரர்கள் உள்ளிட்டவற்றால் இந்த சரிவு காணப்பட்டதாக கூறப்படுகிறது. ஐ.பி.எல். அணிகளை பொறுத்தவரை மதிப்பில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர்.சி.பி.) முதல் இடத்தில் உள்ளது. அதை தொடர்ந்து மும்பை இந்தியன்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் உள்ளன.

# மெஸ்ஸியின் இந்திய பயணம் ரத்து?



**திருவனந்தபுரம், அக். 17-**

பிரபல கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸியின் இந்தியப் பயணம் ரத்து செய்யப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**சுற்றுப்பயணம்...**

அர்ஜென்டினா வீரர் லியோனல் மெஸ்ஸிக்கு உலகம் முழுவதும் பல கோடி ரசிகர்கள் உள்ளனர். நமது நாடு கிரிக்கெட்டின் தேசமாகத் திகழ்ந்து வந்தாலும், கால்பந்துக்கான மவுசும் குறையாமல் உள்ளது. லியோனல் மெஸ்ஸிக்கு கேரளத்தில் பலரும் ரசிகராகவுள்ளனர். உலகக் கோப்பையை வென்ற அர்ஜென்டினா அணியை வழிநடத்திய மெஸ்ஸி, டிசம்பர் மாதம் 13, 14, 15 ஆகிய தேதிகளில் கொல்கத்தா, மும்பை, அகமதாபாத், தில்லி உள்ளிட்ட நகரங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ரசிகர்களைச் சந்திக்கவிருக்கிறார். இதனிடையே பிரதமர் நரேந்திர மோடியையும் அவர் சந்திக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகின.

**ரூ. 70 கோடியில்...**

அதற்கு ஒருமாதம் முன்னதாக, நவம்பர் மாதத்தில் கேரளத்தில் அர்ஜென்டினா - ஆஸ்திரேலியா இடையேயான நட்புறவு கால்பந்தாட்டத்தில் மெஸ்ஸி விளையாடவிருந்தார். அதற்காக ரூ. 70 கோடியில் நேரு விளையாட்டரங்கம் சீரமைக்கப்பட்டு உயர்கோபுர மின்விளக்குகள், இருக்கைகள் மாற்றப்பட்டன. அர்ஜென்டினா அணியில் மெஸ்ஸியுடன் எமிலியானோ மார்டினெஸ், அலெக்சிஸ் மேக் அலிஸ்டர், ரோட்ரிகோ டி பால், நிக்கோலஸ் ஒட்டமெண்டி, ஜூலியன் அல்வாரெஸ் உள்ளிட்டோரும் விளையாடவிருந்ததால், ரசிகர்கள் ஆரவாரத்தில் இருந்தனர். இந்த நிலையில்தான், அவர் இந்தியாவுக்கு வருவது கேள்விக்குறியாகியுள்ளதாகவும், அவரது பயணம் ரத்து செய்யப்படலாம் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. இதனால், அவரது ரசிகர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

### பகைவரை நேருக்கு நேர் எதிர்க்கும் துணிச்சல்:


# கட்டபொம்மன் வாழ்க்கை நமக்கு உணர்த்தும் பாடம்: துணை முதல்வர்

**சென்னை, அக். 17-**

எதிரிகளும் போற்றிய வீரம் - பகைவரை நேருக்கு நேர் எதிர்க்கும் துணிச்சல் - சூழ்ச்சிகளை வீழ்த்தும் செயல்திறன் - இதுவே கட்டபொம்மன் வாழ்க்கை சொல்லும் பாடம். வாழ்க அவரது புகழ் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில் கூறியதவது:- ஆதிக்கத்திற்கு அடங்கிப்போக மறுத்து படைத்திரட்டி போரிட்டு - பார்போற்றும் வீரவரலாறு படைத்த வீரபாண்டிய கட்டபொம்மன் கயத்தாறில் தூக்கிலிடப்பட்ட நாள் இன்று. சென்னை கிண்டியில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகே வைக்கப்பட்டு இருந்த திருவுருவப்படத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் இணைந்து மலர்தூவி மரியாதைச் செலுத்தினோம். எதிரிகளும் போற்றிய வீரம் - பகைவரை நேருக்கு நேர் எதிர்க்கும் துணிச்சல் - சூழ்ச்சிகளை வீழ்த்தும் செயல்திறன் - இதுவே கட்டபொம்மன் வாழ்க்கை சொல்லும் பாடம். வாழ்க அவரது புகழ் என தெரிவித்துள்ளார்.

# மதுரையில் போக்குவரத்து நெரிசல்: சட்டசபையில் அமைச்சர் விளக்கம்



**சென்னை, அக். 17-**

மதுரையில் போக்குவரத்து நெரிசல் குறித்தும், கோரிப்பாளையம் பாலம் பணிகள் குறித்தும் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூவின் கேள்விக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்துள்ளார். அப்போது, 'செல்லூர் ராஜூவின் வீட்டுக்கே சென்றேன்' என அவர் பேசியது சட்டப்பேரவையில் கலகலப்பை உருவாக்கியது. நேற்று சட்டப்பேரவையில் மதுரை போக்குவரத்து நெரிசல் குறித்தும், சாலைகளில் மோசமான நிலை குறித்தும் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, " ஏற்கெனவே 10 ஆண்டுகாலம் விடிவுகாலம் இல்லாதத்தால், விடிவுகாலம் உருவாக்குவதற்காக தமிழக முதல்வர் மதுரைக்கு முக்கியத்துவம் தந்திருக்கிறார். முன்பு அமைச்சராக இருந்த செல்லூர் ராஜூ, மதுரை நகரப்பகுதியை சார்ந்தவர். கடந்த முறை நான் மதுரை சென்றபோது, அவரின் வீட்டுக்கே சென்றேன். அவர் பங்களா கட்டிக் கொண்டு எங்கோ பண்ணை வீட்டில் இருக்கிறார் எனச் சொன்னார்கள்.

கோரிப்பாளையத்தில் உள்ள வீட்டுக்கு சென்றுவர சங்கடமாக உள்ளதாக செல்லூர் ராஜூ என்னிடம் தொலைபேசியில் சொன்னார். அமைச்சராக இருந்தவர் சங்கடப்பட கூடாதே, இதற்கு என்ன செய்யலாம் என யோசித்து ஒரு நாள் காலை நடைபயிற்சி செல்லும்போது நானும், அமைச்சர் மூர்த்தியும் அவரின் வீடு உள்ள பகுதிக்கே சென்று பார்த்தோம். கோரிப்பாளையம் பகுதியில் பாலம் அமைக்க நூறாண்டு காலமாக பிரச்சினை இருந்தது. அழகர் ஆற்றில் இறங்க மண்டகபடி உள்ளதாக ஒரு சாரர் சொன்னார்கள், முத்துராமலிங்க தேவர் சிலையும் அப்பகுதியில் இருந்தது. இது சார்ந்தவர்களிடம் பேசி ஒரு முடிவெடுத்து இந்த பாலம் அமைக்க அடிக்கல் நாட்டி பணிகள் நடந்து வருகிறது. இயற்கையான காரணங்களால் சில இடர்பாடுகள் உள்ளன. ஜனவரி மாதத்துக்குள் அந்த பாலத்தை திறக்கும் வகையில் பணிகளை செய்து வருகிறோம்.

நெரிசல் உள்ள பகுதியான அப்பல்லோ மருத்துவமனை பாலத்தை நவம்பர் மாதமே திறக்க திட்டமிட்டு பணிகள் நடந்து வருகிறது. இந்த இரு பாலப் பணிகளும் வேகமாக நடந்து வருகின்றன. மதுரை மேற்கு தொகுதியில் இன்னொரு பாலமும் கட்டி வருகிறோம். இந்த பாலப்பணிகள் முடிவடைந்ததும் போக்குவரத்து நெரிசல் குறைய வாய்ப்பு உள்ளது. வைகை வடகரை பாத்திமா கல்லூரி முதல் புறவழிச்சாலை, இணைப்புச்சாலைக்கும் ஏற்பாடு செய்துள்ளோம்" என்றார்

## விராட் கோலி பதிவு வைரல்

இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த தொடரில் விளையாடுவதற்காக இந்திய அணி இரு பிரிவுகளாக புறப்பட்டது. தற்போது இந்திய அணி ஆஸ்திரேலியாவிற்கு சென்றடைந்தது. முதலில் ஒருநாள் தொடர் நடக்கிறது. முதல் ஒருநாள் போட்டி வருகிற 19-ந் தேதி நடக்கிறது.

இந்த தொடருடன் கோலி ஓய்வு அறிவிக்க உள்ளதாக சமூக வலைதளங்களில் பல்வேறு கருத்துக்கள் வெளியாகி ரசிகர்களிடையே பேசும் பொருளாக உள்ளது. இந்நிலையில் ஆஸ்திரேலியாவுக்கு சென்றடைந்த இந்திய நட்சத்திர வீரர் விராட் கோலி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஸ்டோரி ஒன்று வைத்துள்ளார். அதில் "நீங்கள் உண்மையிலேயே தோல்வி அடைவது, நீங்கள் விட்டுக்கொடுக்க முடிவு செய்யும் போதுதான் என பதிவிட்டிருந்தார். இது தற்போது வைரலாகி வருகிறது.

## குல்தீப் யாதவ் முன்னேற்றம்

டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) வெளியிட்டது. இதில் பேட்ஸ்மேன்களின் தரவரிசையில் முதல் 4 இடங்களில் ஜோ ரூட், ஹாரி புரூக் (இங்கிலாந்து), வில்லியம்சன் (நியூசிலாந்து), ஸ்டீவன் சுமித் (ஆஸ்திரேலியா) ஆகியோர் தொடருகிறார்கள். வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான 2-வது டெஸ்டில் 175 ரன்கள் குவித்த இந்திய தொடக்க ஆட்டக்காரர் ஜெய்ஸ்வால் இரு இடம் முன்னேறி மறுபடியும் 5-வது இடத்தை பிடித்துள்ளார்.

பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் முதல் 10 இடங்களில் மாற்றமில்லை. இந்தியாவின் பும்ரா 'நம்பர் ஒன்' ஆக வலம் வருகிறார். வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான டெஸ்டில் 8 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் 7 இடங்கள் உயர்ந்து தனது சிறந்த நிலையாக 14-வது இடத்தை பிடித்துள்ளார்.

## பாக்., அணிக்கு புதிய கேப்டன்?

டி20 போட்டிகளில் பாகிஸ்தான் அணியை சல்மான் அகா கேப்டனாக வழிநடத்தி வருகிறார். அணியின் துணைக் கேப்டனாக ஷதாப் கான் செயல்படுகிறார். காயம் காரணமாக சில மாதங்களுக்கு முன்பு துணைக் கேப்டனான ஷதாப் கானுக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதனால் சில மாதங்களாக ஓய்வில் இருந்த ஷதாப் கான் மீண்டும் கிரிக்கெட் விளையாடவுள்ளார்.

காயத்திலிருந்து குணமடைந்து மீண்டும் கிரிக்கெட் விளையாட உள்ள நிலையில், டி20 போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணியின் கேப்டனாக ஷதாப் கான் நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது. ஆல்ரவுண்டரான ஷதாப் கான் இதுவரை பாகிஸ்தான் அணிக்காக 70 ஒருநாள் மற்றும் 112 டி20 போட்டிகளில் விளையாடிய அனுபவம் கொண்டவர்.

# அ.தி.மு.க. தொண்டர்களுக்கு இ.பி.எஸ். கடிதம்



**சென்னை, அக். 17-**

அ.தி.மு.க. தொண்டர்களுக்கு பொதுச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி கடிதம் எழுதினார்.

அ.தி.மு.க.வின் 54-வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு, தொண்டர்களுக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார். அதில், "ஆலமரம் போல தழைத்து, தரணியெங்கும் கிளைகள் பரப்பி நிற்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 54-ஆவது ஆண்டு தொடக்க விழாவினை முன்னிட்டு, உங்கள் அனைவரையும் இந்த மடல் வழியாகச் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எம்.ஜி.ஆர். அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற மாபெரும் மக்கள் இயக்கத்தை 17.10.1972 அன்று தோற்றுவித்தார். கட்சி தொடங்கிய ஆறே மாதங்களில் திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றிக் கொடி நாட்டப்பட்டது. அதன் பின்னர் 1977-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் முதல் முறையாக தமிழ் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியது. எம்.ஜி.ஆர். முதலமைச்சரானார்.

மூன்று முறை தமிழ் நாட்டின் முதலமைச்சராக எம்.ஜி.ஆர். தேர்ந்தெடுக்கப்பட்டார். எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலங்களில் தமிழக மக்களின் நலனை முன்னிறுத்தி எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. ஏழை, எளியவர்களுக்காக எம்.ஜி.ஆர். கொண்டு வந்த சத்துணவுத் திட்டம், இலவச வேட்டி சேலை திட்டம் உள்ளிட்ட பல்வேறு முத்தான திட்டங்கள்தான் இன்றளவும் வரலாறாய் நிலைத்து நிற்கிறது. எம்.ஜி.ஆரின் மறைவிற்குப் பிறகு, `அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' எனும் மாபெரும் மக்கள் பேரியக்கத்தை கண்ணின் இமை போல் பாதுகாத்த ஜெயலலிதா, தொட்டில் குழந்தை திட்டம், அம்மா உணவகம், அம்மா மருந்தகம், பிரசவித்த தாய்மார்களுக்கு அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம், பள்ளி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக் கணினி போன்ற எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி அளப்பரிய சாதனைகளைப் புரிந்து `அமைதி, வளம், வளர்ச்சி' என்கிற கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ் நாட்டை பீடு நடை போடச் செய்தார்.

ஜெயலலிதாவின் மறைவிற்குப் பிறகு, `அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' என்கிற மாபெரும் மக்கள் இயக்கத்திற்கு எத்தனையோ சோதனைகள், வேதனைகள், சதிகள், சூழ்ச்சிகள், துரோகங்கள் என எது வந்த போதிலும், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா என்கிற நம் இருபெரும் தெய்வங்களின் நல்லாசியோடும், என் உயிரினும் மேலான கழக உடன்பிறப்புகளாகிய உங்களின் துணையோடும், கழகத்தை மீட்டு, இன்றைக்கு வீறுநடை போடச் செய்து கொண்டிருக்கிறோம்.

ஜெயலலிதா, "எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்காகவே இயங்கும்" என சட்டமன்றத்தில் சூளுரைத்தபடி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 54-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்ற இந்த இனிய நேரத்தில், இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காக தங்கள் இன்னுயிரைத் தந்த தியாக சீலர்களை நன்றியோடு நினைவுகூருவது எனது கடமையெனக் கருதுகிறேன். கடந்த நான்கரை ஆண்டுகால விடியா திமுக-வின் ஸ்டாலின் மாடல் பெயிலியர் ஆட்சியில் விண்ணை முட்டும் விலைவாசி உயர்வு, சொத்துவரி உயர்வு, மின் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு என பல்வேறு விலைவாசி உயர்வுகளால், தமிழக மக்கள் தலையில் வரிச் சுமைகளை சுமத்தி, சொல்லொண்ணா துயரத்திற்கு ஆளாக்கி வருகிறது இந்த விடியா திமுக அரசு.

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு கேள்விக்குறியாகி இருக்கிறது. எங்கு பார்த்தாலும் கள்ளச் சாராயமும், கஞ்சா புழக்கமும் தமிழ் நாட்டின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி வருகிறது. தமிழக மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசோ, மக்களைக் காப்பாற்றாமல், அவர்களைப் புதை குழியில் தள்ளிவிட்டு, தங்கள் குடும்பம் செழிக்க பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் நடைபெற்று வரும் மக்கள் விரோத ஆட்சியை, குடும்ப ஆட்சியை விரட்டவும், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவின் பேரியக்கத்தை ஆட்சிப் பீடத்தில் மீண்டும் அமர்த்தவும், தமிழக வாக்காளர்கள் ஒவ்வொருவரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நமது தோட்டத்தில் களைகள் நீங்கி பயிர்கள் செழித்து வளர்ந்திருக்கிறது. பொன்னான வசந்த காலம் நம் கண்ணெதிரே தெரிகிறது. வருகின்ற 2026-ல் கழகத்தின் ஆட்சி அமைவதை எத்தனை சக்திகள் ஒன்றுகூடி வந்தாலும், கழகத்தின் வெற்றியை யாராலும் தடுத்து நிறுத்தி விட முடியாது. என் உயிரினும் மேலான கழக உடன்பிறப்புகளாகிய உங்களின் உயர்வுக்காகவும், கழகத்தின் வெற்றிக்காகவும், மக்களின் நலனுக்காகவும் என்னையே அர்ப்பணித்து உழைத்து வருகிறேன். கழகம் 54-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த இனிய தருணத்தில், பேரன்புக்குரிய கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக மக்களை பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கி, சட்டம்-ஒழுங்கை சீர்குலையச் செய்துள்ள இந்த விடியா திமுக-வின் ஸ்டாலின் மாடல் பெயிலியர் ஆட்சிக்கு முடிவுரை எழுதி; அல்லும் பகலும் கண்துஞ்சாது களப் பணியாற்றி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவின் பொற்கால ஆட்சியை தமிழ் நாட்டில் மீண்டும் மலரச் செய்திட இந்த இனிய நன்னாளில், நாம் அனைவரும் உளமார உறுதியேற்போம்" என தெரிவித்துள்ளார்.

# சத்தீஸ்கரில் 170 நக்சலைட்டுகள் சரண்: மத்திய அமைச்சர் அமித்ஷா பெருமிதம்

**ராஞ்சி, அக். 17-**

சத்தீஸ்கர் மாநிலத்தில் நேற்று ஒரே நாளில் 170 நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிவித்துள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலத்தில் நேற்று ஒரே நாளில் 170 நக்சலைட்டுகள் சரணடைந்தனர். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நக்சலைட்டுகளுக்கு எதிரான நமது போராட்டத்தில் ஒரு முக்கிய நாள். நேற்று, சத்தீஸ்கரில் 170 நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளனர். நேற்று முன்தினம் சத்தீஸ்கரில் 27 பேர் ஆயுதங்களை கீழே போட்டனர். மகாராஷ்டிராவில், நேற்று முன்தினம் 61 பேர் மீண்டும் மைய நீரோட்டத்திற்கு திரும்பினர்.

மொத்தத்தில், கடந்த இரண்டு நாட்களில் 258 இடதுசாரி பயங்கரவாதிகள் வன்முறையை கைவிட்டனர். இந்திய அரசியலமைப்பின் மீது நம்பிக்கை வைத்து, வன்முறையை கைவிடுவதற்கான அவர்களின் முடிவை நான் பாராட்டுகிறேன்.

பிரதமர் மோடி தலைமையிலான அரசாங்கத்தின் இடைவிடாத முயற்சிகளால் நக்சலைட்டு அதன் இறுதி மூச்சை இழுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இது உறுதிப்படுத்துகிறது. எங்கள் கொள்கை தெளிவாக உள்ளது: சரணடைய விரும்புவோர் வரவேற்கப்படுகிறார்கள், மேலும் துப்பாக்கியை தொடர்ந்து பயன்படுத்துபவர்கள் எங்கள் படைகளின் கோபத்தை சந்திப்பார்கள். நக்சலைட் பாதையில் இன்னும் இருப்பவர்கள் தங்கள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு மைய நீரோட்டத்தில் சேருமாறு நான் மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறேன். மார்ச் 31, 2026 க்கு முன்பு நக்சலிசத்தை வேரோடு அகற்ற நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் இந்த ஆண்டு நெல் கொள்முதல் உயர்வு

## அமைச்சர் சக்கரபாணி தகவல்

**சென்னை, அக். 17-**

டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் இந்த ஆண்டு நெல் கொள்முதல் அதிகரித்துள்ளது என உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையின் 3-ம் நாள் கூட்டம் நேற்று தொடங்கியது. இந்நிலையில், ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் தேங்கியிருப்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதையடுத்து, உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி இது குறித்து சட்டபேரவையில் பேசும்போது: டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் இந்த ஆண்டு நெல் கொள்முதல் அதிகரித்துள்ளது. டெல்டா மாவட்டங்களில் நெல் குறுவை சாகுபடியானது கடந்த ஆண்டு 3.5 லட்சம் ஏக்கராக இருந்தது. தற்போது 6.31 லட்சம் ஏக்கராக உள்ளது. இது வரலாற்று சாதனையாக உள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 13 மடங்கு நெல் உற்பத்தி வரத்து அதிகரித்துள்ளது. முதல்வர் கடந்த அக்டோபர் 2 ஆம் தேதி ஒரு ஆய்வு கூட்டத்தை நடத்தினார். அப்போது டெல்டா மாவட்டங்களுக்கு சென்று உடனடியாக விவசயிகள் உற்பத்தி செய்துள்ள நெல்லை பெற்று அதை சேமித்து வைத்து மற்ற மாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டும் என தெரிவித்தார். அதனடிப்படையில், கொள்முதல் செய்யப்பட்ட நெல்கள் அறுவை ஆலைகளுக்கு துரிதமாக அனுப்பப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டதை விட, திமுக அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு அதிகளவிலான சேமிப்பு கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில் டெல்டா மாவட்டங்களில் 3.3 லட்சம் மெட்டிக் டன் கொள்ளவு கொண்ட 25 திறந்த வெளி சேமிப்பு கிடங்குகளை திறக்க அனுமதி அளிக்கப்பட்டு 77.196 மெட்டிக் டன் சேமித்து வைக்கப்பட்டுள்ளது இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ராமநாதபுரம் மாவட்டத்தில் வரும் 22-ம் தேதி உயர்கல்விக்கான கல்வி கடன் மேளா முகாம்

**ராமநாதபுரம், அக். 17-**

ராமநாதபுரத்தில் உயர்கல்விக்கான கல்விக்கடன் மேளா முகாம் வரும் 22-ந் தேதி நடைபெற உள்ளதாக கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் மற்றும் முன்னோடி வங்கி இணைந்து நடத்தும் 2025 -2026 ஆம் ஆண்டிற்கான உயர்கல்விக்கான கல்வி கடன் மேளா முகாம் ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மக்கள் குறைதீர்க்கும் கூட்டரங்கில் 22.10.2025 அன்று காலை 10.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

உயர்கல்விக்கான கல்விக்கடன் பெற விரும்பும் மாணவர்கள் கல்விக் கடனுக்கு விண்ணப்பிக்க மற்றும் கல்விக்கடன் பற்றிய ஆலோசனைகளைப் பெற விரும்பும் மாணவர்கள் இம்முகாமில் கலந்து கொள்ளலாம். இம்முகாமில் உயர்கல்விக்கு சேர்க்கை பெற்றிருக்கும் மாணவர்களுக்கு கல்விக்கடன் வழங்குதல் மற்றும் விண்ணப்பங்களை மத்திய அரசின் பிரதமர் வித்யா லெட்சுமி திட்டத்தின் மூலம் விண்ணப்பிக்க வழிகாட்டுதல் மற்றும் கல்விக்கடன் குறித்து சந்தேகங்களை தீர்த்து வைத்தல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மாணவர்கள் கல்விக்கடன் பெறும் செயல்முறையினை எளிமைப்படுத்துதல், பின் தங்கிய கிராமப்புற மாணவர்களுக்கு நிதி உதவியினை உறுதி செய்தல், பிரதம மந்திரி வித்யாலெட்சுமி இணைய தளம் வழியாக விண்ணப்பிக்கும் முறையினை விளக்குதல், கல்விக்கான நிதி தடையில்லாமல் அனைவரும் உயர்கல்வி பெற வழிவகை செய்தல் இம்முகாமின் நோக்கமாகும். மற்றும் இந்தியா அல்லது வெளிநாடுகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு, உயர் பட்டப்படிப்பு, தொழில்நுட்ப, தொழில் முறை பாடநெறிகளில் சேர்க்கை பெற்றுள்ள மாணவர்கள் பங்கேற்கலாம்.

மேலும் இம்முகாமில் கலந்து கொள்ளும் மாணவர்கள் ஆதார் - பான் கார்டு (மாணவர் ரூ பெற்றோர்), 10-ஆம் மற்றும் 12-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்கள், கல்லூரி சேர்க்கை கடிதம், கட்டண விவர பட்டியல், வருமானச் சான்றிதழ், வங்கி கணக்கு எண் (மாணவர் - பெற்றோர்), சாதிச்சான்றிதழ், பூர்விகச் சான்றிதழ், புகைப்படம் -4 (மாணவர் - பெற்றோர்) மற்றும் வங்கி கோரும் பிற ஆவணங்கள் ஆகியவற்றை கொண்டு வர வேண்டும். ராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறக்கூடிய கல்வி கடன் மேளா முகாம்களில் வங்கிகள் நேரிடையாக பங்கேற்று பிரதம மந்திரி வித்யாலெட்சுமி இணையதளம் மூலம் பதிவு செய்து உடனடியாக கல்விக் கடன் வழங்கப்படும் என்பதால் விருப்பமுள்ள மாணவ, மாணவிகளும், பெற்றோர்களும் கலந்து கொண்டு பயன் பெறலாம். இந்த தகவலை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.




**மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அமல்படுத்துவது உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ-ஜியோ அமைப்பின் சார்பில் கோரிக்கை அட்டை அணிந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.**



**வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவு நாளை முன்னிட்டு மதுரையில் உள்ள அவரது உருவசிலைக்கு தமிழ்நாடு ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட யாதவ மகாசபை சார்பில் அதன் மாவட்ட தலைவர் நாட்டாமை ஜெயக்குமார் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் நிர்வாகிகள் எவரெஸ்ட் எம்.கண்ணன், வடக்குமாசி வீதி சீனிவாசன், வர்த்தக அணி நாகராஜ், மணிகண்டன், தினேஷ்குமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

# ஸ்கேட்டிங் போட்டியில் சாதனை படைத்த ஒட்டன்சத்திரம் வேந்தன் ஸ்போர்ட்ஸ் அகாடமியை சேர்ந்த வீரர்கள்




**ஒட்டன்சத்திரம்,அக்.17-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வேந்தன் ஸ்போர்ட்ஸ் அகாடமி வீரர், வீராங்கனைகள் மாவட்ட அளவிலான பல்வேறு வயது மற்றும் பிரிவுகளில் பங்கேற்று தங்களின் சிறந்த திறமையை வெளிப்படுத்தினர். பல்வேறு பிரிவுகளில் சான்றிதழ்களும் பதக்கங்களும் வென்று, ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் கோப்பையையும் தங்களின் திறமையால் கைப்பற்றினர்.

இந்த போட்டியில் அதிபன்,இரண்டு தங்கப்பதக்கங்கள் ரக்ஷணா ஸ்ரீ ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கம், மதுவர்ஷன் ஒரு தங்கப்பதக்கம், ஸ்ரீநிதி ஒரு வெள்ளிப் பதக்கம், யுகன், இரண்டு வெள்ளிப்பதக்கங்கள், தீரன், இரண்டு தங்கப்பதக்கங்கள், சாணக்கியன் ஞானப்ரகாஷ், இரண்டு தங்கப்பதக்கங்கள், செல்வமித்ரன் ஒரு தங்கப் பதக்கம், கோகுல்பாண்டி, ஒரு தங்கப் பதக்கம், பிரியதர்ஷினி, இரண்டு தங்கப்பதக்கங்கள், லக்ஷயா இரண்டு வெண்கலப் பதக்கங்கள். பெற்றனர்.

சாதனை படைத்த வீரர், வீராங்கனைகளை தலைமைப் பயிற்சியாளர் பிரேம்நாத் உள்ளிட்ட பயிற்சியாளர்கள் வேந்தன் ஸ்போர்ட்ஸ் அகாடமி விளையாட்டு வீரர்கள் மாவட்ட அளவில் வெளிப்படுத்திய இந்த வெற்றி, எதிர்காலத்தில் மாநில, தேசிய, சர்வதேச அளவிலான போட்டிகளில் மேலும் உயர்ந்த சாதனைகளைப் படைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளது என்று கூறினர்.

# இடையகோட்டையில் நாட்டு நலப்பணித்திட்ட முகாம்




**ஒட்டன்சத்திரம்,அக்.17-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள இடையகோட்டை நேருஜி அரசு மேல்நிலைப்பள்ளியில் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் தலைமை ஆசிரியர் ஜான் வில்பர் பொன்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

மாநில உதவி தொடர்பு அலுவலர் சௌந்தர்ராஜ் சிறப்புரையாற்றினார். திட்ட அலுவலர் செந்தில்குமார் உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆசிரியர் ரவி நன்றி கூறினார்.

# தீபாவளி பண்டிகையை விபத்து-மாசற்ற பண்டிகையாக கொண்டாட கலெக்டர் வாழ்த்து

**விருதுநகர்,அக்.17-**

தீபாவளித் திருநாள் மக்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் திருநாளாகும். இத்திருநாளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவார்கள். அதேவேளையில், பட்டாசுகளை வெடிப்பதால் நம்மை சுற்றியுள்ள நிலம், நீர், காற்று உள்ளிட்டவை பெருமளவில் மாசுபடுகின்றன. பட்டாசு வெடிப்பதால் எழும் அதிகப்படியான ஒலி மற்றும் காற்று மாசினால் சிறுகுழந்தைகள், வயதான பெரியோர்கள் மற்றும் நோய்வாய் பட்டுள்ள வயோதிகர்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு கடந்த நான்குஆண்டுகளாக தீபாவளி பண்டிகையன்று காலை 6 முதல் 7 மணி வரையும், இரவு 7 முதல் 8 மணி வரையில் மட்டுமே ஒலிஎழுப்பும்பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்து அனுமதி வழங்கியது. இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகை தினத்தன்று, கடந்த ஆண்டைப் போலவே காலை 6 முதல் 7 மணி வரையிலும், இரவு 7 முதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசுகளை வெடிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. சட்டத்தை மீறுபவர்கள் மீது

உச்சநீதிமன்ற ஆணையின்படி நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். மேலும்

சுற்றுச்சூழலை பாதிப்பு இல்லாமல் பேணிக் காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் ஆகும். இதனை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் குறைந்த ஒலியுடனும், குறைந்த அளவில் காற்று மாசுபடுத்தும் தன்மையும் கொண்ட பசுமைபட்டாசுகளை மட்டுமே வெடிக்க வேண்டும்.

ஆகவே, பொதுமக்கள் சுற்றுச்சூழலுக்கு அதிக மாசு ஏற்படுத்தாத பட்டாசுகளை அரசு அனுமதித்துள்ள நேரத்தில் உரிய இடங்களில் கூட்டாக வெடித்து மாசற்ற தீபாவளியை கொண்டாடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தெரிவித்துள்ளார்.

# தீபாவளிக்காக பண வசூலில் ஈடுபட்ட தீயணைப்பு வீரர்கள் வெளிப்பணிக்கு மாற்றம்

**விருதுநகர், அக். 17-**

விருதுநகரில் தீபாவளிக்காக பணம் வசூலித்த 3 தீயணைப்பு வீரர்களை வெளிப்பணிக்கு மாற்றம் செய்து தீயணைப்புத்துறை தென் மண்டல துணை இயக்குனர் உத்தரவிட்டார்.

விருதுநகர் தீயணைப்பு நிலையத்தில் பணிபுரிந்து வந்த வினோத், அரிச்சந்திரன், நவநீதகிருஷ்ணன் ஆகியோர், தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பட்டாசு ஆலை, கடைகள், வணிக நிறுவனங்கள் ஆகியவற்றில் பணம் வசூல் செய்வதாக விருதுநகர் மாவட்ட இலஞ்ச ஒழிப்புத்துறைக்கு புகார் வந்தது. இதையடுத்து, இலஞ்ச ஒழிப்புத்துறை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் இராமச்சந்திரன் தலைமையிலான போலீசார், விருதுநகர் தீயணைப்பு நிலையத்தில் அக். 13 அன்று இரவு திடீர் சோதனை நடத்தினர். அப்போது, 2 கையேடுகளில் இனாமாக பணம் கொடுத்தவர்களின் பெயர் பட்டியல் இருந்தது கண்டறியப்பட்டது. அதில் ரூ. 4.94 லட்சம் வசூலித்திருப்பதும் தெரிய வந்தது. இதையடுத்து பண வசூலில் ஈடுபட்ட வினோத், அரிச்சந்திரன், நவநீதகிருஷ்ணன் ஆகியோர் மீது இலஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த விவகாரம் தொடர்பாக தென்மண்டல தீயணைப்புத்துறை துணை இயக்குனர் ராஜேஷ் கண்ணன், மூன்று தீயணைப்பு வீரர்களையும் வெளியிட பணிக்கு மாறுதல் செய்து உத்தரவிட்டார். அதில் வினோத், தேனி மாவட்டத்தில் உள்ள கடமலைக்குண்டு தீயணைப்பு நிலையத்திற்கும், அரிச்சந்திரன் ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடிக்கும், நவநீதகிருஷ்ணன் மதுரை மாவட்டம் மேலூருக்கும் மாறுதல் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

# நத்தம் அருகே பணம் வைத்து சூதாட்டம்: 4 பேர் கைது

**நத்தம், அக்.17-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் போலீஸ்- சப்-இன்ஸ்பெக்டர் அருண்நாராயணன் உள்ளிட்ட போலீசார்கள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது செல்லப்பநாயக்கன்பட்டி மயானம் பகுதியில் ஒரு கும்பல் பணம் வைத்து சூதாடி கொண்டிருந்தனர். பின்னர் அந்த கும்பலை போலீசார் மடக்கி பிடித்து விசாரணை நடத்தியதில் அவர்கள் செல்லப்பநாயக்கன்பட்டியை சேர்ந்த ராமச்சந்திரன்(35), மேலூர்- அட்டபட்டியை சேர்ந்த ராஜா (39), பாலப்பநாயக்கன்பட்டியை சேர்ந்த கார்த்திக்(35), ஊராளிபட்டியை சேர்ந்த வீரமணிகண்டன் (25) என்பது தெரியவந்தது.

இதையடுத்து 4 பேர் மீது வழக்கு பதிவு செய்த போலீசார் அவர்களை கைது செய்தனர்.மேலும் அவர்களிடமிருந்து ரூ.800 பணம், சீட்டு கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.



**திண்டுக்கல் மாநகராட்சி அலுவலகத்தில் தூய்மை பணியாளர்களுக்கு இந்த ஆண்டுக்கான சீருடை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா, மாநகராட்சி ஆணையாளர் செந்தில் முருகன், மண்டல தலைவர்கள் பிலால் உசேன், ஜான் பீட்டர், தொ.மு.ச. மாவட்ட தலைவர் அழகர்சாமி மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் இருந்தனர்.**

# விருதுநகர், சாத்தூர் பகுதியில் வளர்ச்சித்திட்ட பணிகள்: மகளிர் மேலாண்மை இயக்குநர் ஷஜீவனா கள ஆய்வு



**விருதுநகர், அக்.17-**

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் மற்றும் சாத்தூர் வட்டாரப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்ட பணிகள் மற்றும் அரசு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா முன்னிலையில், மகளிர் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ஷஜீவனா கள ஆய்வு மேற்கொண்டார்.

விருதுநகர் மாவட்ட விளையாட்டு அரங்க மைதானம் அருகில் அருங்காட்சியகங்கள் துறை சார்பில் ரூ.6.80 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் புதிய அருங்காட்சியக கட்டிட பணிகளின் முன்னேற்றம் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.சாத்தூர் வட்டம் உப்பத்தூரில் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ், கட்டப்பட்டு வரும் கீழ்நிலை நீர்த்தேக்கத்தொட்டி பணிகளின் முன்னேற்றம், அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

சாத்தூர் வட்டம் மேட்டமலை ஊராட்சியில் முதியோர் ஓய்வூதிய திட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச வேஷ்டி, சேலைகளை நேரில் சென்று வழங்கி, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று குடிமைப் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டத்தின் பயன்கள் குறித்து கேட்டறிந்து கலந்துரையாடினார். சாத்தூர் ஊராட்சி ஒன்றியம் சின்னக்காமன்பட்டி ஊராட்சியில் மகளிர் குழுவின் மூலம் கடன் பெற்று செயல்பட்டு வரும் பிளவர் மில்லினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு பயன் பெறும் சுய உதவிக்குழுக்களின் நபர்களின் எண்ணிக்கை குறித்தும், இதன் மூலம் சுய உதவி குழுக்களுக்கு கிடைக்கும் பயன்கள் குறித்தும் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன், திட்ட இயக்குநர் ஜார்ஜ் ஆண்டனி மைக்கேல், வட்டாட்சியர், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மத்திய, மாநில அரசுகளின் நிதி பங்களிப்பை

# மதுரை மாநகராட்சியில் முறையாக பயன்படுத்தவில்லை

## அ.தி.மு.க. மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் பா.சரவணன் குற்றச்சாட்டு

**மதுரை, அக் 17-**



இது குறித்து மாநில அ.தி.மு.க.மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

மதுரை மாநகராட்சியில் வரலாறு காணாத வகையில் 200 கோடிக்கு மேல் வரி முறைகேடு நடைபெற்று உள்ளது. இதுகுறித்து எடப்பாடியார் விரிவான அறிக்கை வெளியிட்டு கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதன் முதலில் குரல் கொடுத்தார். முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்க முடியாது என்பதை போல இன்றைக்கு ஊழல் வெளிச்சத்துக்கு வந்த பின்பு அரசின் மீது உள்ள கரையை போக்க முதலில் 5 மண்டல தலைவர்கள்,2 நிலைக்குழு தலைவர்கள் பதவியை ராஜினாமா செய்ய வைத்தார்கள் .அதனை தொடர்ந்து ஊடங்களில் பூதகாரமாக வெடித்த பின்பு மேயர் கணவரை கைது செய்தார்கள். பொதுவாக இந்திய அரசியல் சட்ட அமைப்பில் படி மக்கள் பிரதிநிதியாக இருப்பவர்களின் குடும்பத்தினர், ரத்த உறவுகள் தவறு செய்தால் அந்த பதிவில் அவர் நீடிக்க கூடாது என்பது தான் உள்ளது. தற்பொழுது இந்தப் பிரச்சனை மேலும் வலுவாக இருந்த நிலையில் தற்போது மேயர் தனது பதவியை ராஜினாமா செய்து உள்ளார்.

மதுரையில் 100 வார்டுகள் உள்ளது இந்த வார்டுகளில் நிதிகளை முறைப்படி செய்யப்பட்டுள்ளதா? ஏனென்றால் மதுரையில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படவில்லை. சாலைகள் மிகவும் மோசமாக உள்ளது.சாலைகளில் தெருவிளக்கு இல்லை இது போன்ற அடிப்படைப் பிரச்சினைகளால் மக்கள் தவித்து வருகிறார்கள். அதேபோல கடந்த 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மதுரை மாநகராட்சியில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் நேரு மதுரை மாநகராட்சி வளர்ச்சி பணிகளுக்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது என்று கூறினார் அந்த பணம் முழுமையாக ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டதா என்று மக்களிடத்தில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே நிதி அறிக்கையில் 6 ,208 கோடி, அதே போல மத்திய மாநில அரசுகளின் மானியங்கள் ,நிதிகள் எல்லாம் மதுரை மாநகராட்சியில் முறையாக செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. ஆகவே இது குறித்து ஒரு முழுமையான வெள்ளை அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும். அரசு என்றால் மக்களுக்காக சேவையை செய்யும் சேவகனாக இருக்க வேண்டும் ஆனால் இன்றைக்கு தி.மு.க. அரசு மக்களிடத்தில் வீட்டு வரி உயர்வு, சொத்து வரி உயர்வு, குடிநீர் கட்டணம் உயர்வு, குப்பை வரி உயர்வு என மக்களிடம் பணத்தை சுரண்டும் அரசாக இருக்கக் கூடாது.தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சியில் நல்லாட்சி இல்லை உள்ளாட்சியில் ஊழல் ஆட்சியாக தான் உள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



**வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவு நாளை முன்னிட்டு மதுரையில் உள்ள அவரது உருவசிலைக்கு மாநகர் மாவட்ட அ.தி.மு.க.சார்பில் மாவட்ட துணை செயலாளர் வில்லாபுரம் ராஜா தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் நிர்வாகிகள் எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், சக்திமோகன், எம்.எஸ்.கே.மல்லன், கு.திரவியம், வி.பி.ஆர்.செல்வகுமார், தளபதி மாரியப்பன், நாட்டாமை ஜெயக்குமார், எம்.ஜி.ராமச்சந்திரன், சக்திவிநாயகர்பாண்டியன், ரவிராஜ், எம்.ஏ.நாசர், திடீர்நகர் பாலா, கோவில் நெடுஞ்செழியன், நாகேந்தின் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**


# கட்டபொம்மனின் 226-வது நினைவு நாள்: உருவ படத்திற்கு இ.பி.எஸ். அஞ்சலி

**சென்னை, அக். 17-**


சென்னையில் செவ்வந்தி இல்லத்தில் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் உருவ படத்துக்கு எடப்பாடி பழனிசாமி அஞ்சலி செலுத்தினார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், தமிழகத்தின் முன்னாள் முதல்வருமான எடப்பாடி கே.பழனிசாமி விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் 226-வது நினைவு நாளையொட்டி நேற்று சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது உருவ படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.





சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் 226-வது நினைவு நாளை முன்னிட்டு சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப்படத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் துணை முதல்வர் உயதநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., நா.எழிலன் எம்.எல்.ஏ, துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், அமர் சேவா சங்கத்தின் நிறுவனர் எஸ்.ராமகிருஷ்ணன் மற்றும் கவுரவ செயலாளர் எஸ்.சங்கரராமன் ஆகியோர் சந்தித்து பேசினர். உடன் தலைமைச் செயலாளர் முருகானந்தம், அமர் சேவா சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் அன்பு ரமேஷ் மற்றும் நிர்வாகிகள், அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# கிட்னி திருட்டு விவகாரத்தில் பாரபட்சமின்றி நடவடிக்கை

## சட்டசபையில் அமைச்சர் உறுதி

**சென்னை, அக். 17-**

கிட்னி திருட்டு விவகாரத்தில், எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல், புகார் வந்த மருத்துவமனைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன'' என மாநில சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் 3-வது நாளாக நேற்று நடைபெற்று வரும் நிலையில், கிட்னி திருட்டு புகார் தொடர்பாக சட்டப் பேரவையில், அ.தி.மு.க. கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவந்தது. மேலும் எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். அதற்கு பதிலளித்து பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், "கிட்னி திருட்டு விவகாரம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதல்வர் உத்தரவிட்டார். அதனடிப்படையில், தமிழக சுகாதார திட்ட இயக்குநர் மருத்துவர் வினித் ஐ.ஏ.எஸ். அவர்களிடம் விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு வலியுறுத்தப்பட்டது. வினித் ஐ.ஏ.எஸ். தலைமையிலான குழு சார்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதில், தவறான சான்றிதழ்களை வழங்கியதும், சட்ட நுணுக்கங்களை தவறாக பயன்படுத்தியதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம், திருச்சி பகுதிகளில் கள ஆய்வை இந்த குழுவினர் மேற்கொண்டனர். கிட்னி திருட்டு புகார் தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்படுள்ளது. பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனை, திருச்சி சிதார் ஆகிய மருத்துவமனைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சம்மந்தப்பட்ட மருத்துவமனைகள் கிட்னி மாற்று அறுவை சிகிச்சை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல், புகார் வந்த மருத்துவமனைகளின் உரிமங்கள் உடனடியாக ரத்து செய்யப்பட்டுள்ளன. இது மாதிரியான குற்றச்சாட்டுகள் கடந்த காலங்களிலும் நடந்துள்ளன. அப்போது இருந்த அரசு எந்த சட்டப்பூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

குற்றம் நடந்தது எந்த மருத்துவமனையாக இருந்தாலும், யாருடைய மருத்துவமனையாக இருந்தாலும் உடனடியாக சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என முதல்வர் அறிவுறுத்தினார். அதனடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறுநீரக முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதாக அறியப்படும் ஸ்டாலின் மோகன், ஆனந்தம் ஆகிய இருவரின் மீது குற்றவியல் நடவடிக்கைகள் தொடரப்பட்டு, அந்த இருவரும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். தானம் எனும் பெயரில் உடல் உறுப்பை விற்கக்கூடாது என ஆட்சியர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான ஆவணங்கள் 10 ஆண்டுகள் வரை பராமரிக்கப்பட வேண்டும். அனைத்து ஆவணங்களும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. கிட்னி மோசடி தொடர்பாக 7 பேர் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க வேண்டும்'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 18.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரத்தில் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் பல்நோக்கு விளையாட்டரங்கம் அமைத்தல் மற்றும் புதுக்கோட்டை பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் புதுப்பித்தல் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், சபாநாயகர் மு.அப்பாவு, அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், வை.முத்துராஜா எம்.எல்.ஏ. மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு 20% தீபாவளி போனஸ் அறிவிப்பு

## 44,081 பேர் பயன்பெறுவர்

**சென்னை, அக். 17-**

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2024- 2025 ஆண்டுக்கான மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை 2025- 2026ல் வழங்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 44,081 பணியாளர்களுக்கு ரூ.44 கோடியே 11 லட்சம் மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை வழங்கப்படவுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "போனஸ் சட்டத்தின் கீழ் வரும் கூட்டுறவு சங்கங்களில் ஒதுக்கப்படக் கூடிய உபரித் தொகையை கணக்கில் கொண்டு அச்சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் (போனஸ்) வழங்கப்படும். உபரி தொகை இல்லாமல் உள்ள சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தீபாவளி பண்டிகையினை சிறப்பாக கொண்டாடுவதற்கு ஏதுவாக 10 விழுக்காடு மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்கள் பணிபுரிந்து போனஸ் சட்டத்தின் கீழ் வராத நிகர லாபம் ஈட்டும் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

போனஸ் சட்டத்தின் கீழ் வராத நிகர லாபம் ஈட்டாத தலைமைச் சங்கங்கள் மற்றும் மத்திய சங்கங்களாக இருப்பின் அவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.3,000ம், தொடக்க சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ரூ.2,400ம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கருணைத் தொகையாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இதன்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் 44,081 பணியாளர்களுக்கு ரூ.44 கோடியே 11 லட்சம் மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை வழங்கப்படவுள்ளது. அரசின் இந்த நடவடிக்கை கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மிகவும் ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும், ஊக்கத்துடனும் பணியாற்றுவதையும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாடவதையும் உறுதி செய்திட வழிவகை செய்யும்'' என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கச்சத்தீவு மீட்பு...(1-ம் பக்க தொடர்ச்சி)

ஏற்படுத்தியுள்ளது என்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் நிரந்தரமாக பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய இந்தப் பிரச்சினையை இலங்கை பிரதமரிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்குறிப்பிட்டுள்ள இருதரப்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நிறுவப்பட்ட மீன்வளத்திற்கான கூட்டுப் பணிக்குழு, சமீபத்திய ஆண்டுகளில் தொடர்ந்து கூட்டப்படுவதில்லை. எனவே, இரு நாடுகளைச் சேர்ந்த மீனவர்களின் கவலைகளை, நிலையான மற்றும் ஒருங்கிணைந்த முறையில் நிவர்த்தி செய்வதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட தளத்தை உருவாக்க இந்த வழிமுறையை மீண்டும் புதுப்பிப்பது அவசியமாகும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினைகளினால் ஏற்படும் மனித மற்றும் பொருளாதார பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, தொடர்ச்சியான தூதரக நடவடிக்கைகள் மூலம் விரைவான மற்றும் நீடித்தத் தீர்வை அடையும் நோக்கில், இவற்றை இலங்கை பிரதமரிடம் எடுத்துச் சென்று விவாதிக்க வேண்டும் என்று இந்திய பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்வி வளர்ச்சி நாளான ஜூலை-15ஆம் நாளையொட்டி செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் சார்பில் "என் பள்ளி ! என் பெருமை!!" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 70 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும், பதக்கங்களையும் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் ராஜாராம், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலாளர் . இரா. சுதன், பள்ளிக் கல்வித் துறை கண்ணப்பன், கூடுதல் இயக்குநர் பாஸ்கர் மற்றும் துறைசார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் தலைமையில் நேற்று, தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.